

வேர்குரு
உபத்திரவம்
ஒழிக
ஸின்டால்
பவுடர் உடனே
குணமளிக்கும்
SYNTOL
Powder
எல்லா கெமிஸ்டுக
ளிடமும் கிடைக்கும்
ஸின்டெடிக் (இந்தியா) லிட்.
12, ஸ்லேட்டர் ரோட்,
பம்பாய் 7 டெலிபோன் : நெ. 42650
லண்டன் ஆபீஸ்:
128/129, சீப்ஸைட், லண்டன் E. C. 2
சென்னை மாகாணத்துக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
கே. கே. பிள்ளை & கம்பெனி, ராயப்பேட்டை, சென்னை
E—PSY

K. S. D. 5.

கல்கி
பொருளடக்கம்

மலர் 6
இதழ் 12

1946 அக்டோபர் 20

வியய
ஐப்பசி 4

"அன்பர் பணிசெய்ய என்னை—ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து—எய்தும் பராபரமே!"

என்று தாயுமானவர் அருளியதற்கு ஜீவனுள்ள அத்தாட்சி வேண்டுமானால், வாலாஜாபாத் ஸ்ரீ மாசிலாமணி முதலியாரைப் பார்த்துக் கொள்ளுங்கள். நமது அட்டைப் படத்தில் அவர் எப்படிக் குதூகலமாயிருக்கிறாரோ, அப்படித்தான் எந்த நேரத்திலும் இருக்கிறார். இதற்குக் காரணம் அவர் அன்புப் பணிக்கே தம்மை ஆளாக்கி விட்டிருப்பதுதான்.

ஒரு எளிய மனிதர்,—பணமோ, பட்டம் பதவியோ, படாடோபமோ இல்லாதவர்,—ஏழைப் பிள்ளைகளுக்கு வாழ்வில் பயன்படக்கூடிய சிறந்த தேசியக் கல்வி அளிக்கும் தொண்டைப் பல வருஷங்களுக்கு முன் மேற்கொண்டார். அந்தத் தொண்டுக்கே தம்மை அர்ப்பணம் செய்தார். இன்ஷியூரன்ஸ் ஏஜெண்டு வேலை சம்பாதித்துக் கொண்டு அதில் கிடைத்த வருமானத்தை மொத்தம் பாடசாலைக்கு அர்ப்பணம் செய்தார். தர்ம சிந்தை உள்ள அறிவாளிகள் பலரின் உதவியை நாடினார். சின்னஞ் சிறு திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பித்த ஸ்தாபனம் இன்று தமிழ் நாடெங்கிலுமிருந்து வந்த 700 பிள்ளைகள் இலவசக் கல்வி கற்கும் தலைசிறந்த ஸ்தாபனமாக விளங்குகிறது. இவர்களில் 400 குழந்தைகள் இலவச உணவு பெற்றும் பள்ளிக்கூடத்தை அடுத்துள்ள வள்ளலார் இல்லத்தில் வசிக்கிறார்கள். சாதி வேற்றுமை என்பது இன்னதென்று தெரியாத முறையில் எழுத்துப் படிப்போடு ஒழுக்கப் படிப்பும், கைத்தொழிற் பயிற்சியோடு சமரச சமய ஞானமும் பெற்று வருகிறார்கள். இவ்வளவும் ஒரு தனி மனிதருடைய தளராத ஊக்கத்திலும் சளியாத முயற்சியிலும் அன்பிலும் ஆர்வத்திலும் நடந்திருக்கிறது.



அக்டோபர் மாதம் 6-ல் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் நடந்த வா ஜெனித் திறப்பு விழாவை முன்னிட்டு சென்னையிலிருந்து அன்பர்கள் பலர் வந்து பாடசாலையைப் பார்வையிட்ட காட்சியை நமது அட்டைப் படத்தில் காணலாம். சென்னையிலிருந்து வந்தவர்கள் அத்தனை பேரும் ஒருமுகமாக "ஸ்ரீ மாசிலாமணி முதலியாரின் கல்வித் தொண்டை எவ்வளவு உயர்த்திப் பேசினாலும் அது உள்ளதற்குக் குறைவாகவே இருக்கும்" என்று அபிப்பிராயப் பட்டார்கள்.

ஆனால் நமது அட்டைப் படத்திலே அவரை இதைக் காட்டிலும் உயர்த்தி வைக்க முடியாது என்பதை நேயர்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்!

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

என்ன சேதி?

பலமான சூட்டு

சர் சாமுவேல் ரங்கநாதன் தலைமையில் பாரிஸ் சமாதான மகாநாட்டுக்குப் போயிருந்த இந்தியத் தூதுகோஷ்டிக்கு ருஷ்ய வெளி நாட்டு மந்திரி மாலடாவ் ஒரு பலமான சூடு கொடுத்திருக்கிறார்.

பிரிட்டன் கை தூக்கச் சொன்னபோதெல்லாம் இந்தியா கொஞ்சங்கூட ஆலோசிக்காமலும் தயங்காமலும் கை தூக்கியதை மிஸ்டர் மாலடாவ் குறிப்பிட்டுக் கண்டித்திருக்கிறார். அவர் எதற்காகக் கண்டிக்க வேண்டும், கண்டிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. பாரிஸ் மகாநாட்டுக்குப் போயிருந்த தூதுகோஷ்டியை இடைக்கால தேசிய சர்க்கார் அனுப்பவில்லை. புது டில்லி அதிகாரவர்க்க சர்க்கார் தங்களுடைய ஏகாதிபத்திய நலனைக் காப்பதற்காக அந்தத் தூது கோஷ்டியை முன்னமே அனுப்பி வைத்தார்கள். ஏகாதிபத்திய நலனைக் காப்பதற்காக அனுப்பப்பட்ட தூதுகோஷ்டி ஏகாதிபத்தியம் கை தூக்கச் சொன்னது போலக் கை தூக்காமல் பின் யார் சொன்னதுபோலக் கை தூக்கும்?

உறுதி கூறுகிறோம்

இந்தியாவுக்குச் சுதந்திரம் இருந்து, தூதுகோஷ்டியும் பிரதிநிதித்வம் வாய்ந்ததாக இருக்கும் பட்சத்தில் இந்தியத் தூதுகோஷ்டி இவ்விதம் நடந்து கொண்டிருக்குமா என்று மாலடாவ் ரொம்பவும் வருத்தப் படுகிறார்.

அத்தகைய வருத்தம் மிஸ்டர் மாலடாவுக்கு இனிமேல் வேண்டியதில்லை என்று நாம் உறுதி கூறுகிறோம். நமக்கு முன்னால் பண்டித நேருவும் உறுதி கூறியிருக்கிறார். இடைக்கால தேசிய சர்க்கார் ஏற்பட்ட உடனே பண்டித நேரு இந்திய வெளி நாட்டுக் கொள்கையைப் பற்றிச் செய்த ரேடியோப் பிரசங்கத்தில் வெகு அழகாகவும் தெளிவாகவும் சொல்லியிருப்பதை மிஸ்டர் மாலடாவ் படிப்பாரானால் அவர் துள்ளிக் குதிப்பார் என்பதில் சந்தேகமில்லை. வேண்டுமென்று ஒரு நாட்டுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ நடக்காமல், உலக விவகாரங்களில் எது நியாயமென்றும் நேர்மையென்றும் தோன்றுகிறதோ அதையே இனி இந்தியா பின்பற்றும் என்று நேருஜி சொல்லியிருக்கிறார்.

இனிமேல் நடக்கும் சர்வதேச மகாநாடுகளில் இந்தியத் தூதுகோஷ்டி அத்தகைய நேர்மையான முறையைப் பின்பற்றுவதைப் பார்த்து மாலடாவ் சந்தோஷமடைவாரென்றும் நம்புகிறோம்.

இன்னொரு விஷயம்

ஆனால், அதே சமயத்தில் நாம் இன்னொரு விஷயத்தையும் மிஸ்டர் மாலடாவுக்குத் தெரிவித்தாக வேண்டும். இந்தியா நேர்மையாகவும் கண்ணியமாகவும் நியாயமாகவும் நடந்து கொண்டதாக மாலடாவின் பாராட்டுதலைப் பெறவேண்டுமென்றால், அதற்காக இந்தியா எப்போதுமே ருஷ்யாவுடன் சேர்ந்து ஓட்டுச் செய்யவேண்டுமென்றோ, பிரிட்டனையும் அமெரிக்காவையும் சதா எதிர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றோ அவர் நினைக்கக் கூடாது. மிஸ்டர் மாலடாவ் அம்மாதிரியாக நினைப்பதானால், அவருடைய பாராட்டுதல் இந்தியாவுக்கு வேண்டியதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பக்கத்தில் ருஷ்யாவுக்கும் மற்றொரு பக்கத்தில் பிரிட்டிஷ் - அமெரிக்காவுக்கும் நடக்கும் போராட்டத்தில் நியாயம் என்பது ஒரு பக்கத்திலேயே எப்போதும் இருக்காதல்லவா? சில சமயம் இரண்டு தரப்பிலுமே நியாயம் இல்லாமலும் இருக்கக் கூடுமல்லவா? எனவே, இந்தியப் பிரதிநிதிகள் அந்தந்தப் பிரச்னையில் நியாயம் எந்தக் கட்சியில் இருக்கிறதோ, அந்தக் கட்சிக்கே வோட்டு அளிப்பார்கள்.

இரு சேவைகள்

சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலை தமிழ்நாட்டுக்கும் தமிழ் பாஷைக்கும் எதிர்பார்த்த தொண்டுகளைச் செய்யவில்லையென்றும், சென்னைச் சர்வ கலாசாலையைக் 'காப்பி' அடித்தே காரியங்களைச் செய்கிறதென்றும் பலர் புகார் சொல்லியிருக்கிறார்கள். நாமும் சொல்லியிருக்கிறோம். எனினும், அண்ணாமலை சர்வ கலாசாலையின் மூலமாகத் தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும் இரண்டு அருமையான தொண்டுகள் நடந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

அவற்றில் ஒன்று, தமிழ் பாஷைக்கு ஒரு அருமையான கவிதை கிடைத்ததாகும். 'அண்ணாமலை சர்வ கலாசாலையைப் பார்த்து மகிழ்ச்சி பொங்கி அல்லவா சிதம்பரத்தில் சிற்றம்பலத்தில் நடராஜப் பெருமான் இடைவிடாமல் ஆனந்தத் தாண்டவம் புரிகிறார்!' என்ற பொருள் கொண்ட கீழ்க்கண்ட வெண்பாவைக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை பாடியுள்ளார்:

தில்லைப் பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும்நின்(று) ஆடுகின்றான்—
எல்லைக்கண்
அண்ணாமலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து!

இத்தகைய கவிதைப் பண்பு வாய்ந்த அருமையான பாடல் ஒரு பாஷைக்கே சிறப்புத் தருவதாகும். இதைப் பதினாயிரத்தில் ஒரு பாட்டு என்று சொன்னால், அது மிகையாகாது.

அடுத்தபடியாக மேற்படி சர்வ கலாசாலை தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கும் முக்கியமான சேவை என்னவென்றால், சென்ற செவ்வாய்க்கிழமையன்று அங்கு நடந்த பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தைச் சென்னைக் கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் தமிழிலேயே நிகழ்த்தியதாகும். இதுவரை யாராலும் தமிழிலே சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் செய்யப்பட்டதே இல்லை. தமிழில் மாத்திரம் என்ன? தென்னிந்தியாவில் சுதேச பாஷை எதிலுமே பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் நடைபெற்றதில்லை. முதல் முதலாக அந்தப் பெருமையை அண்ணாமலை சர்வகலாசாலை அடைந்திருக்கிறது.

இதைக் கால்கோள் விழா அல்லது அங்குரார்ப்பண விழாவாகக் கொண்டு அண்ணாமலைச் சர்வ கலாசாலை கூடிய சீக்கிரத்தில் உண்மையான தமிழ்ப்பல் கலைக் கழகம் ஆகிவிடலாம் அல்லவா?

தூக்கம் வருகிறதா?

சம்பிரதாயத்தை மீறிக் கல்வி அமைச்சர் செய்த பிரசங்கத்தின் உட்பொருளும் சம்பிரதாயத்தை மீறியதாகவே அமைந்திருக்கிறது.

பொதுவாகப் பட்டமளிப்பு விழா நிகழ்த்துகிறவர்கள் தங்களுடைய சொந்தப் பிரத்யேகமான அரசியல் அபிப்பிராயங்களையும் விதண்டாவாதங்களையும் வெளியே எடுத்துச் சொல்லுவதற்காக அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கம். ஆனால், ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் அந்த மாதிரியான அரசியல் விவகாரம் எதிலும் நுழையவே இல்லை. அவர் தம்முடைய பிரசங்கத்தில் மிகவும் வற்புறுத்திக் கூறியிருப்பது என்னவென்றால், மாணவர்கள் எல்லோரும் சேவை உணர்ச்சியைக் கைக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். கனம் கல்வி மந்திரி தற்போதைய இந்தியாவின் பரிதாபகரமான நிலைமையை மாணவர்கள் கண் முன்னாலே கொண்டு வந்து காட்டி, "ஐயோ, இதைப் பார்த்த பிறகும் உங்களுக்குத் தூக்கம் வருகிறதா? உங்கள் இருதயம் துடிக்கவில்லையா?" என்று உருக்கமாகவும் ஆவேசமாகவும் கேட்டிருக்கிறார்.

கனம் கல்வி மந்திரியின் வேண்டுகோளுக்குப் பட்டம்பெற்ற மாணவர்கள் செவி சாய்ப்பார்கள் என்றும், அதன் மூலம் தாங்கள் கல்வி பயின்ற அண்ணாமலை சர்வகலாசாலைக்குப் பெயரும் புகழும் அளிப்பார்களென்றும் நம்புகிறோம்

தபால் மூலம் கல்வி

கல்வி முறையில் சீர்திருத்தத்தைப் பற்றிய வரையில், கிராம சர்வ கலாசாலைகளை அமைக்க வேண்டும் என்றும், கிராமங்களிலே உள்ளவர்களும் தபால் மூலமாக உயர்தரக் கல்வி பயின்று எந்தவிதமான பரீட்சைக்கும் போய்ப் பட்டம்பெற வசதி இருக்கவேண்டும் என்றும் கல்வி மந்திரி சொல்லியிருக்கும் யோசனை மிகவும் முக்கியமானது. ஏறக்குறைய இதே யோசனையைச் சென்ற வாரத்தில் "சுதந்திரா" ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பாராவ் வாலாஜாபாத்தில் வெளியிட்டது குறிப்பிடத் தக்கதாகும். மேற்படி யோசனையைக் கல்வி மந்திரி காரியத்தில் எப்படி நிறைவேற்றி வைக்கப் போகிறார் என்பதை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.



இந்திய தேசிய சர்க்காரில் இதுவரையில் சேராதிருந்த முஸ்லிம் லீக் இப்போது சேர்ந்து கொள்ளத் தீர்மானித்துவிட்டது.

ஸலாம், சாகிப்!

காயிதே ஆஜம் ஜனாப் ஜின்னா சாகிப்புக்கு ஒரு பெரிய ஸலாம்! வாருங்கள்! வாருங்கள்! அப்படித் தான் சரியான வழிக்கு வரவேண்டும்! குறுக்கேயும் நெடுக்கேயும் முள்ளிலும் கல்லிலும் முன்னும் பின்னுமாகப் போய்க் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? நல்ல வழியில் நீங்கள் போகாததும் அல்லாமல் சரியான வழியில் போகிறவர்களையும் எதற்காகக் குறுக்கே நின்று தடுக்க வேண்டும்? இப்போது வந்திருக்கும் வழிதான் சரியான வழி! அந்த வழியிலேயே போங்கள். ஏற்கெனவே அந்தச் சரியான வழியில் போய்க் கொண்டிருக்கிறவர்களோடு கையைக் கோத்துக் கொண்டு சந்தோஷமாகக் குலாவிக் கொண்டு உற்சாகமாகப் பேசிக் கொண்டு போங்கள்! மறுபடியும் குறுக்கு வழி எங்கே என்று பார்த்து முள்ளிலும் கல்லிலும் இறங்க வேண்டாம். இந்த வழியிலேயே, நல்லவர்கள் போகிறவர்கள் வழியிலேயே, கண்ணை மூடிக்கொண்டு போனால் கூடப் பாதகமில்லை. எல்லாருமாகப் போவதால் போகவேண்டிய இடத்துக்குச் சீக்கிரம் போய்ச் சேரலாம். ஆனால், வழியல்லாத வழியில் கண்ணை நன்றாய்த் திறந்துகொண்டு போனாலும் ஆபத்து ஏற்படும். கல்கத்தா, பம்பாய், நோக்காலி, திப்பேரா முதலிய இடங்களிலே பயங்கரமான படுகுழியில் விழுந்தது போல் விழும்படியாக நேரிடும். கடைசியில் ஒரு நாள் பள்ளத்தில் விழுந்த பிறகு திரும்ப எழுந்திருக்க முடியாமலே போய்விடக் கூடுமல்லவா?

* * *

பிரிட்டிஷ் மந்திரிகளின் நீண்ட காலத் திட்டத்தையும் இடைக்காலத் திட்டத்தையும் நிராகரிப்பதாகத் தீர்மானம் செய்திருந்த முஸ்லிம் லீக்கினர் அந்தத் தீர்மானத்தை மாற்றிக் கொண்டதோடு இடைக்கால தேசிய சர்க்காரிலும் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்தது பற்றி மொத்தத்தில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

சேருகிறபோது காங்கிரஸ் தலைவர்களுடனே சமரசம் செய்து கொண்டு ஒற்றுமையுடன் ஒத்துழைக்கத் தீர்மானித்துக் கொண்டு சேர்ந்திருந்தால் நமது மகிழ்ச்சி அளவு கடந்து போயிருக்கும். அப்படி நாம் அதிக சந்தோஷப்பட்டுவிட இடமில்லாதபடி முஸ்லிம் லீக்கினர் வைஸ்ராயின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சொந்தப் பொறுப்பில் தேசிய சர்க்காரில் சேர்ந்திருக்கிறார்கள்.

அதனாலும் குடிமுழுகிப் போய் விடவில்லை. ஏதோ இடைக்கால தேசிய சர்க்காரில் சேர்ந்தவரையில் சந்தோஷமான காரியந்தான். சில காலம் சேர்ந்து வேலை செய்த பிறகு மனவேறுபாடுகள் தீர்ந்து, ஒத்துழைப்பு மனப்பான்மை ஏன் ஏற்படக் கூடாது? தேசத்துக்கு நல்ல காலமிருந்தால் கட்டாயம் ஏற்பட்டே தீரும்.

முஸ்லிம் லீக்கினர் இடைக்கால தேசிய சர்க்காரில் சேர்ந்த விஷயத்தில் கவனிக்க வேண்டிய மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன:—

1. தேசிய சர்க்காரில் சேர்வதற்கு இதுவரையில் ஜனாப் ஜின்னா போட்டுக் கொண்டிருந்த கடுமையான நிபந்தனையை அவர் கைவிட்டிருக்கிறார்.

அதாவது தேசிய சர்க்காரில் எடுக்கப்படும் முஸ்லிம் மந்திரிகள் அனைவரும் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும் என்று ஜனாப் ஜின்னா வற்புறுத்திக்கொண்டு வந்தார். இந்த நிபந்தனை காரணமாகவே மூன்று தடவை தேசிய சர்க்கார் ஏற்படுவது தடைப்பட்டு நின்று போயிற்று. ஏனெனில் தேசிய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபை மேற்படி நிபந்தனையை ஒப்புக் கொள்ளக் கண்டிப்பாக மறுத்து விட்டது. எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவரையும் நியமிக்கும் பாத்தியதை காங்கிரஸுக்கு உண்டு என்று வற்புறுத்தியது.

ஜனாப் ஜின்னா கடைசியாகத் தமது பிடிவாதத்தைத் தளர்த்தி விட்டு மேற்படி நிபந்தனையைக் கைவிட நேர்ந்திருக்கிறது. ஜனாப் ஆஸப் அலி மந்திரியாயிருக்கும் தேசிய சர்க்காருக்கு முஸ்லிம் லீக்கினரை அனுப்பக் காயிதே ஆஜம் சம்மதித்திருக்கிறார்.

இது இந்திய தேசியத்துக்குப் பெரிய வெற்றி. காங்கிரஸின் சமுதாய

ஐக்யக் கொள்கைக்கு மாபெரும் வெற்றி. மொத்தத்தில் தேசத்துக்கே மகத்தான வெற்றி.

காங்கிரஸ் தலைவர்கள் மேற்படி சமூக ஒற்றுமை இலட்சியத்தைக் கைவிட முடியாதென்று ஒரே பிடிவாதமாயிருந்ததுமன்றி அதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராயிருந்தார்கள். கடைசியாக அவர்களுடைய ஐக்யக் கொள்கை பெருமித வெற்றியடைந்திருக்கிறது. அவர்களுடைய தீர்க்க திருஷ்டியையும் உறுதியையும் வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

2. ஜனாப் ஜின்னா தேசிய சர்க்காருக்குத் தாம் அனுப்பியிருக்கும் ஐந்து நபர்களில் ஒருவரைத் தாழ்த்தப்பட்ட வகுப்பிலேயிருந்து தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இது ஹிந்து சமூகத்தின் ஒருமைப்பாட்டைக் கலைக்கவும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ளவும் ஜனாப் ஜின்னா செய்திருக்கும் சூழ்ச்சி என்பதாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்த ஏட்டிக்குப் போட்டியான காரியத்துக்குப் பின்னால் அத்தகைய நோக்கம் இருந்திருக்கலாம். ஆயினும் மொத்தத்தில் அது நன்மையான காரியம், நன்மை விளைக்கும் காரியம், என்றே நாம் கருதுகிறோம்.

முஸ்லிம் லீக்கானது முஸ்லிம்களுக்கு மட்டும் உரிய அரசியல் ஸ்தாபனம் என்னும் கொள்கை இதனால் தளர்ந்து போகிறது.

நாளடைவில் முஸ்லிம் லீக்கானது வெறும் சமூக ஸ்தாபனமாயிராமல் பொதுக் கொள்கையுடைய அரசியல் ஸ்தாபனமாக மாற இடம் ஏற்படுகிறது.

நாளடைவில் காங்கிரஸுக்கு எதிராயுள்ள ஜஸ்டிஸ் கட்சி முதலிய சமூக ஸ்தாபனங்களும் முஸ்லிம் லீக்கோடு சேர்ந்து கொள்ளலாம்.

அந்தக் காலம் வரும்போது முஸ்லிம் லீக்கின் பெயரைக் கூட மாற்றி வேறு அரசியல் கருத்துடைய பொதுப் பெயரை வைத்துக் கொள்ளலாம்.

இப்படியெல்லாம் நடந்தாலும் நடக்காவிட்டாலும், ஸ்ரீ ஜோகேந்திர நாத் மண்டல் என்பவரைத் தேசிய சர்க்காருக்கு முஸ்லிம் லீக் தெரிந்தெடுத்ததினால் பெரிய கெடுதல் எதுவும் ஏற்பட்டுவிடும் என்று நாம் நினைக்கவில்லை.

ஆறு கோடி மக்களாகிய தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இன்னொரு ஸ்தானம் அதிகப்படியாகக் கிடைத்தது திருப்திகரமான விஷயமாகும்.

3. முஸ்லிம் லீக்கின் சார்பாகத் தேசிய சர்க்காருக்கு நியமிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் அங்கத்தினரின் யோக்கிய தாம்சங்கள் அடுத்தபடியான முக்கியமான விஷயம்.

இவர்களுக்குள்ளே முதல்வரான ஜனாப் லியாகத் அலிகான் சிறந்த திறமையுள்ளவர் என்பதும், ஜனாப் ஜின்னாவின் வலதுகை போன்றவர் என்பதும் பிரசித்தமான விஷயம். இவர்தான் காலஞ் சென்ற ஸ்ரீ புலாபாய் தேசாயுடன் ஒரு சமரச உடன்படிக்கை செய்து கொண்டவர் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இத்தகையவர் தேசிய சர்க்காரில் சேர்வது தேசத்துக்கும் லீக்குக்கும் நன்மை பயக்கு மென்றே கருதுகிறோம். அதோடு தேசிய சர்க்கார் சமரச மனப்பான்மையுடன் நன்றாக நடப்பதற்கும் ஒத்தாசையாயிருக்கக்கூடும்.

மற்ற மூன்று பேரும் (ஜனாப் சந்திரிகர், ஜனாப் அப்துல் ரப் நிஷ்டர், ஜனாப் கஸ்னாவர் அலி கான் ஆகியவர்கள்) ஏற்கெனவே நெருப்பைக் கக்கும் சமூகத் துவேஷப் பிரசங்கங்கள் செய்து வந்தவர்கள்.

இதனாலேயே அவர்கள் தேசிய சர்க்காருக்குள்ளே புகுந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் வெளியிலே காரசாரமாகப் பேசுகிறவர்கள் நிர்வாகப் பொறுப்புள்ள பதவிக்கு வந்த பிறகு காரியத்தில் அதே மாதிரி நடந்து கொள்வார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

மேலும், பதினொன்று பேர் உள்ள தேசிய சர்க்காரில் ஐந்து பேர் அப்படியொன்றும் பிரமாதமான தொந்தரவைக் கொடுத்துவிட முடியாது.

* * *

ஆகக் கூடி முஸ்லிம் லீக் அதன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு, ஒத்துழையாமை முனையிலிருந்து பின் வாங்கி, தேசிய சர்க்காரில் சேர்ந்து கொள்ளச் சம்மதித்தது தேசத்துக்கு நன்மை பயக்கக் கூடியது என்றே நம்புகிறோம். உத்தேசமாக வருங்கால விளைவுகளைப்பற்றி மதிப்பிடும் காரியங்களில், நன்றாக நடக்கும் என்று நம்பிக்கை கொள்வதே நல்லதல்லவா? பின்னால் கெடுதல் வரக்கூடும் என்று எண்ணி இப்போதிருந்தே எதற்காகக் கவலைப் படவேண்டும்?

வெள்ளகால் முதலியார்



தமிழ்ப் பாவை அனேகருக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்திருக்கிறது என்று சொல்ல இடம் இருக்கிறது. மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சதா தமிழுக்கு உழைத்த காரணமாகத் தொண்ணூறு வயசு வாழ்ந்திருந்தார்.

அதேபோல ராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரும் தொண்ணூறு வயசு வாழ்ந்திருந்து சென்ற சனிக்கிழமை 12-10-46 அன்று சிவபதம் அடைந்தார்.

திருநெல்வேலி ஜில்லாவில் திருக்குற்றாலம் வட்டத்திலுள்ள வெள்ளகால் என்ற கிராமத்தில் ஸ்ரீ முதலியார் பிறந்து வளர்ந்தவர். பெரிய பண்ணையார் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் கல்வி பயின்று விவசாயக் கல்லூரியிலும் கால்நடை வைத்தியக் கல்லூரியிலும் பட்டம் பெற்று அந்த இலாக்காக்களில் உத்யோகம் வகித்து வெட்டினரி டிப்டி சூப்பரின்டெண்டு பதவியிலிருந்து இருபத்தைந்து வருஷத்துக்கு முன் விலகினார்.

பத்து வயசிலிருந்தே தமிழ் இலக்கியத்தில் ஆசையை வளர்த்து வந்தார். அதற்கு ஏற்றவாறு திருநெல்வேலியில் தமிழ்ப் புலவர்கள் குழாம் ஒன்று அச்சமயம் இருந்தது. இளம் பிராயத்திலேயே அந்தக் குழாத்தோடு கலந்துகொண்டு அவர்கள் சொல்லும் பாடல்களை அனுபவித்து வந்தார்.

தமிழ் நூல்கள் என்றால் அவர் படியாத நூல் கிடையாது. எவ்வளவு கஷ்டமான நூல் ஆனாலும் பாடல்கள் ஐயாயிரம் பதினாயிரம் என்றிருந்தாலும் அவ்வளவையும் படித்துவைத்து விடுவார். காஞ்சிப் புராணம் தணிகைப் புராணம் இரண்டையும் முழுதும் கற்று ஆராய்ந்தவர் தமிழ் நாட்டில் முதலியாரைத் தவிர்த்து வேறு யாரும் இல்லை.

அறுபது வருஷத்துக்கு முன்பு புலவர் உலகத்தில் சிலேடை பாடுவதைப் பாராட்டி வந்தார்கள். எல்லாப் புலவர்களும் திகைக்கும்படி நெல்லைச் சிலேடை வெண்பா என்னும் நூறு செய்யுள் கொண்ட நூலை அரங்கேற்றினார்.

தமிழுக்கு ஏதாவது தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆத்திரம் தூண்டிக் கொண்டே இருக்கும் அவரை. அதன் பயனாக மில்டனுடைய 'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் இதிகாசத்தைத் தமிழ்ப் படுத்தினார். கோம்பி விருத்தம் முதலிய செய்யுள் நூல்களும் ஸ்பென்ஸர் எழுதிய கல்வி விளக்கத்தின் தமிழ் வசன நூலும் வெளியாயின. அகலிகை வெண்பா என்னும் பிரபந்தமும் ஒரு முக்கியமான வெளியீடு.

கடைசியாக முதலியார் கம்ப ராமாயணத்திலேயே ஈடு படலானார். கம்ப ராமாயணத்தில் குறிப்பிட வேண்டிய பாடல்களைத் திரட்டி 'கம்ப ராமாயண இன்கவித் திரட்டு' என்ற பெயருடன் விசேஷ உரைகளோடு வெளியிட்டார்.

சென்ற எழுபது வருஷ காலமாகத் தமிழுக்கே தம்மை அர்ப்பணம் பண்ணியிருந்தவர் ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார்; தமிழ் அன்பர், தமிழ்த் தொண்டர், தமிழ் வீரர், தமிழ் வள்ளல் என்று சொல்லும் புகழுக்கெல்லாம் உரிய பாத்திரமாய் இருந்தார். அவரது எண்பதாவது ஆண்டு விழாவை ஒட்டிக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை பத்து வருஷத்துக்கு முன்னால் பாடிய பாடல் இது:—

எண்பதாண் டானை
இளைஞனே, இன்னமுதின்
பண்பெலாம் காட்டுதமிழ்ப்
பாவலனே—நண்பனே

வெள்ளக்கால்ச் செல்வனே
வேள்சுப் பிரமணிய
வள்ளலே வாழ்க
மகிழ்ந்து!

என்னும் அந்த அழகான பாடலைக் கேட்டுப் பரவசமாகாதவர் கிடையாது.

இவ்வளவு புகழுக்கும் உரியவராய் விளங்கி வந்த பெரியவரின் அரிய உயிர் இறைவன் அடி சேர்ந்துவிட்டது. தமிழ் நாடும் தமிழும் ஒரு பெருந் துணையை இழந்து நிற்கின்றன.

நல்ல சேதி!

புதுடில்லியிலிருந்து சென்ற வாரத்தில் இரண்டு நல்ல செய்திகள் வந்தன. அவற்றில் ஒன்றைக் குறித்துத் தலையங்கத்தில் எழுதியிருக்கிறோம். அது நல்ல செய்திதானா என்பதுபற்றிச் சிலருக்குச் சந்தேகம்கூட ஏற்படலாம். ஆனால் மற்றொரு சேதியோ அசல், ஒண்ணாந்தர, நூற்றுக்கு நூற்றிரண்டு பங்கு நல்ல சேதியாகும்! அதாவது தேசீய சர்க்கார் ஆட்சி நடத்தும் புதுடில்லியிலுள்ள தென்னிந்தியர்கள் நமது தென்னிந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்வி ஸ்தாபனமாய் விளங்கும் திருச்சி தேசீய கலாசாலைக்காக ஒரு நாடகம் நடத்திப் பணம் வசூலித்து அனுப்பப் போகிறார்கள் என்பதுதான். இதற்கு அவர்கள் "கள்வனின் காதலி!" என்னும் கல்கியின் கதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எல்லாம் நமது 'சுப்புடு'வின் வேலை! எந்த சுப்புடு என்றால், சிலசமயம் புதுடில்லியிலிருந்து நமக்கு ரஸமான கடிதங்கள் எழுதுகிறாரே, அந்த சுப்புடுதான்! அவருடனும் மேற்படி முயற்சியில் மற்ற நண்பர்களுடனும் புதுடில்லித் தமிழர்கள் எல்லாரும் ஒத்துழைத்து ஒரு நல்ல ஸ்தாபனத்துக்கு உதவிசெய்த புண்ணியத்தைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

*　　*　　*

இங்கே திருச்சியில் நாளது 20உ ஞாயிற்றுக்கிழமை மேற்படி நேஷனல் காலேஜ் கைங்கரியத்துக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி, சங்கீதரத்ன சௌடய்யா முதலியவர்களின் பக்க வாத்தியத்துடன் நடைபெறுகிறது. இந்தக் கச்சேரியை நேஷனல் காலேஜ் நிதிக்குப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வைரவிழாக் காரியதரிசி ஸ்ரீ எல். என். எஸ். மணி சிறந்த முயற்சிகள் செய்து வருகிறார். அவருடைய முயற்சிகளுக்கு ஆதரவு தந்து ஒத்துழைக்க வேண்டுமென்று திருச்சி ஜில்லா வாசிகளுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை; கச்சேரி 20-ந் தேதி என்பதை மட்டும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தி வைக்கிறோம்.



பாரிஸில் இத்தனை நாள் நடந்த சமாதான மகாநாட்டில் நாலு வல்லரசுகளும் ஓயாமல் சண்டையிட்டன. அடுத்தபடி நியூயார்க்கில் சமாதான மகாநாடு நடக்கப்போகிறதாம்,

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ஆலத்தூர் சகோதரர்கள், குறிப்பிடத் தக்க தாளக்கட்டும், லயவின்யாஸமும் கொண்டு, இருவரும் சேர்ந்து உருப்படிகளையும், மாறி மாறி ஸ்வரப்ரஸ்தாரங்களையும் வழங்குவதில் ஒரு தனிச் சிறப்புண்டு. 14ல் திருச்சியில் நிகழ்ந்த அவர்களின் கச்சேரி அதை நிரூபித்தது. ஆனால் ராகங்களை நல் வடிவங்களாய்ச் சித்திரிப்பதில் போதிய கவனம் செலுத்துகிறார்களா என்ற சந்தேகம் அவர்களுடைய கச்சேரியைக் கேட்கும்போது ஏற்படுகிறது. அன்று பாடிய ஐந்து ராகங்களில் கல்யாணியும் ஸரஸ்வதியும் தான் வடுப்படாத உருவங்களாய் வெளிவந்தன. 'சரஸஸாமதான' கிருதி மிகப்பழையது. அதன் ராகமாம் காபிநாராயணி இக்காலம் கேட்பதற் கரிதாய் விட்டதால், அதை ஆலாபனைக்கு எடுத்துக் கொண்டதைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் சில இடங்களில் அது காபி ராகமாக த்வனித்தது. கிருதியில் 'பேத தண்டசதுர' என்றுள்ள 'சதுர'வில் இருக்கும் தீவிர காந்தார ப்ரயோகத்தை நன்கு கவனித்தால் ராகத்தைச் சரியாய்ப் பாடி விடலாம். ஆனால் ஸரிமாமகாரி என்று அடிக்கடி பிடித்ததில், தீவிரகாந்தாரப் பிரயோகங்கள் ராகஸ்வரூபத்துக்கு உகந்தவாறு இல்லாததால், சாமா சாயை தட்டியது போலும். பாடகரின் காபி நாராயணியைப் பிடில் வாசித்தவரும் காபி யாக்கிவிட்டார்! தர்பார், ஆனந்தபைரவி ராகங்களை, வெறும் ஸ்வரக் கோர்வைகளாலான உருவங்களாயில்லாது, வளைந்திழையும் கொடிகளாய் அமைத்திருக்கலாம்.

10ல் திருச்சியில் நடந்த கே. சாவித்ரி அம்மாளின் கோட்டுவாத்யக் கச்சேரி ரஞ்சகமாயிருந்தது. சுருதி சுத்தமும் கமகப் பொழிவும் கொண்டு பல ராகங்களையும் உருப்படிகளையும் வாசித்தார். ஜகன்மோஹினி, பூர்வி கல்யாணி, சங்கராபரணம் ராகங்கள் கவனத்தைக் கவர்ந்தன. உருப்படி ஸ்வரப்ரஸ்தாரங்கள் தரமாயிருந்தன.

13ல் திருச்சியில் பாடிய மன்னார்குடி ராஜகோபால பிள்ளை நல்ல அனுபவம் வாய்ந்த வித்வான். அன்றைய தினம், அவரது தொண்டை சிறிது சிரமம் கொடுத்த போதிலும், கச்சேரியை நன்கு சமாளித்தார். சங்கராபரணம், கல்யாணி ராகங்களும் உருப்படிகளும் ஆழ்ந்த ஞானத்தை விளக்கின.

* * *

வழக்கமான சென்னை திருச்சி சஞ்சாரங்களிலிருந்து டில்லியிலிருக்கும் நமது சகோதரர்களையும் கொஞ்சம் கவனிக்கலாமென்று 8ல் சிற்றலையைத் திருப்பினேன். எதிர்பார்த்ததற்கு மேலான பலன் கிடைத்தது. அன்று டில்லி தென்னிந்திய ஒலிபரப்பில், கே. ஜி. அப்புசாமியின் கானம் காதை நிரப்பியது. நடுத்தர சாரீரம், நல்ல உதவுபடி. ரீதிகௌளை ராகமும் 'ஜனனி' கிருதியும் தெளிவு கொண்ட சொரூபங்களாய் விளங்கின.

11ல் திருச்சியில் வி. பி. ராஜேஸ்வரி, சென்னையில் ருக்மிணி வாசுதேவன் இவர்களின் கானங்கள் சிறப்பாயிருந்தன. முன்னவர், இனிய குரலில், பிர்க்காப் பொழிவும் நானாக்கு வழியும் கொண்டு பாடிய காம்போதி, யதுகுலகாம்போதி ராகங்களும் உருப்படிகளும் கவனத்தைக் கவர்ந்தன. ருக்மிணி வாசுதேவனுக்கு நடுத்தரக்குரல், சாமான உதவுபடி. பாடியதெல்லாம் குறிப்பிடத்தக்க தெளிவுகொண்டு வனப்பு வடிவங்களாய் விளங்கின. காமாஸ், இறுதி ராகமாலிகை இவைகளோடு மந்தாரிகை விஸ்தாரமாயும் வடுப்படாமலும் வழங்கினார்.

13ல் சென்னையில் மருத்துவக்குடி ராஜகோபாலய்யர், ஞானச்சிறப்பும் அபூர்வ கற்பனையும் கொண்ட சங்கீதத்தை ஒரு மணி நேரம் பொழிந்தார். கல்யாணி அழகு சஞ்சாரக் கோவை நிரம்பியதாக இலங்கிற்று. காபி வெகு ருசியாயிருந்தது. ராகமாலிகை உருக்கமாயிருந்தது.

அன்று திருச்சியிலிருந்து காலையிலும் மாலையிலும் இரு பாகமாக ஒரு அபூர்வ கானம் கேட்டது. இனிய சன்னக்குரலில் வியக்கத்தக்க தேர்ச்சியோடு தோடி, சங்கராபரண ராகங்கள் சரமாரியாய்ப் பொழிந்தன. உருப்படிகளின் நிரவல் ஸ்வரங்கள் கலகலத்திருந்தன. பாடியவர் சீதாமணி ஸ்ரீநிவாஸன்.

14ல் சென்னையில் சுசீந்திரம் ஜி. கோபாலு, மணக்கால் எஸ். நடராஜன் இவர்களின் கச்சேரிகள் உயர்ந்த ரகமாயிருந்தன. முன்னவருக்குச் சக்திவாய்ந்த குரல். பைரவி, ஷண்முகப்ரியா ராகங்கள் மனதை உருக்கின. மணக்கால் நடராஜனின் சங்கீதம் பிர்க்கா வகைகளைச் சேர்க்கவில்லை என்றால், என்னை நம்பமாட்டீர்கள்! ஆம்! அன்று ஒரு பிர்க்காக்கூட இல்லாமல், சங்கராபரணம், யதுகுல காம்போதி, காமாஸ் ராகங்களையும் உருப்படிகளையும் இழைத்திழைத்தே பாடினார்!

அன்று டில்லியிலிருந்து மாலையில் கேட்ட கே. கிருஷ்ணமூர்த்தியின் கானம் நய சாரீரத்தில் சுருதி சுத்தமும் கமகமும் கொண்டிருந்தது. கேதாரகௌளையும், த்விஜாவந்தியும் பாவப் பொழிவாயிருந்தன. மத்யமகால வேகமே உயர்ந்த சங்கீதமாகக் கருதப்படும் இக்காலத்தில், அதற்கு விலக்காக, ராகபாவம் [illegible]யுடன், விளம்ப காலத்தில் [illegible]களாய், '[illegible]', 'கல்லோ உனது நெஞ்சம்' என்ற உருப்படிகளை வழங்கியது விசேஷ திருப்தியளித்தது.



கனவு நனவாயிற்று!

"பகீரதன்"

இந்த மாதம் ஆறுந்தேதி அதிகாலையில் சென்னை தியாகராஜ நகரிலிருந்து ஏழுரை மோட்டார் வண்டிகள் மேற்கு நோக்கிப் புறப்பட்டன. ('ஜீப்' என்று சொல்லப்படும் புதுவித இராணுவ மோட்டாரை 'அரை' வண்டி என்று கணக்கிட்டிருக்கிறேன். வண்டி அரை வண்டியானாலும் அதில் உட்கார்ந்திருந்தவர்கள் ஏழுபேர்!) எல்லா வண்டிகளும் சென்னையிலிருந்து சுமார் நாற்பது மைல் தூரத்தில் பாலாற்றங் கரையில் உள்ள வாலாஜாபாத்தை நோக்கிச் சென்றன. அன்று சென்னை நகரமே கொஞ்சம் வெறிச் சென்றுதான் இருந்திருக்க வேண்டும்!

"சுதந்திரா" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ காலா சுப்பராவ்; ஆசிரியர் கல்கி; தமிழ் "ஹரிஜன்" ஆசிரியர் ஸ்ரீ திரிகூட சுந்தரம் பிள்ளை; ட்ரோஜன் கம்பெனி ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார்; தமிழ்ப் பண்ணை ஸ்ரீ சின்ன அண்ணாமலை; ஸ்ரீ மதி ராஜம் பாரதி; ஸ்ரீ ரகுராஜ பாரதி; ஹிந்தி பிரசார சபை சத்தியநாராயணா; ஜயபாரதம் கம்பெனி ஸ்ரீ டபிள்யூ. பி. இக்னேஷியஸ்; சென்னை நகரசபைக் கல்வி அதிகாரி ஸ்ரீ சங்கரன்; இந்திய ஊழியர் சங்கத்து ஸ்ரீ கே. எஸ். வெங்கட்ராமன்; அடியேன் இத்தனை பேருமாகச் சேர்ந்து நகரை விட்டுக் கிளம்பி விட்டால் சென்னைப் பட்டணம் வெறிச் சென்றிராமல் பின் எப்படி இருந்திருக்கும்?

காலை எட்டுமணி சுமாருக்கு வாலாஜாபாத் எல்லைக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே போய்ச் சேரும் வரையில் வாலாஜாபாத் என்பது ஒரு பட்டணமோ, கிராமமோ என்றுதான் எண்ணியிருந்தேன். எல்லையை அடைந்ததும் அது ஒரு இராஜ்யம் என்று தெரிந்தது! வந்தவர்கள் எல்லாரும் ஒருமுறை தங்களைத் தாங்களே ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்க ஆரம்பித்தோம். பத்து மந்திரிமார்கள் மலர் மாலைகளுடனும் மற்ற மரியாதைகளுடனும் எங்களை வரவேற்பதற்குக் காத்திருந்தால் நாங்கள் வேறு என்னதான் செய்ய முடியும்?


மேற்படி பத்து மந்திரிமார்களையும் வாலாஜாபாத் இராஜ்யத்தின் முடிசூடா அரசர் ஸ்ரீ மாசிலாமணி முதலியார் எங்களுக்கு அறிமுகப் படுத்தினார். "இவர் பிரதம மந்திரி; இவர் ஒழுக்க மந்திரி; இவர் கல்வி மந்திரி; இவர் நலத்துறை மந்திரி அதாவது வைத்திய மந்திரி; இவர் உடற்பயிற்சி மந்திரி; இவர் கருவூல மந்திரி அதாவது பொக்கிஷ மந்திரி; வேளாண்மை மந்திரி; உணவு மந்திரி; விளம்பர மந்திரி; சட்ட மந்திரி" என்று வரிசைக்கிரமமாக அறிமுகம் செய்து வைத்தார்.

முதலில் ஒரே வியப்பிலும் பிரமிப்பிலும் மூழ்கிப்போன நாங்கள் விஷயம் தெரிந்ததும் ஒருவாறு தேறித் தெளிந்தோம். வாலாஜாபாத் இந்துமத பாடசாலையிலுள்ள 700 மாணவர்கள் தங்களுக்குள்ளே நூறு உறுப்பினர்களும் பத்து மந்திரிகளும் கொண்ட ஆட்சி மன்றத்தைத் தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறார்கள் என்றும், அவர்களால் இராஜ்யத்தின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெற்று வருகிறதென்றும் அறிந்தோம்.

★

இந்துமத பாடசாலையைச் சேர்ந்த வள்ளலார் மாணவர் இல்லத்தை அடைந்ததும் உணவு மந்திரியின் நிர்வாகத் திறமையை நாங்கள் நன்கு அறிய முடிந்தது. காலைச் சிற்றுண்டி சிற்றுண்டியாக இராமல் இட்டிலி, பொங்கல், வடை என்று பேருண்டியாகவே நிகழ்ந்தது! அதைச் சாப்பிட்டவுடனேயே வந்திருந்த அதிதிகள் உணவு மந்திரியை வாயாரவும் வயிறாரவும் வாழ்த்த ஆரம்பித்து விட்டார்கள்! ஆனால் காப்பியில் வெள்ளைச் சர்க்கரைக்குப் பதிலாக வெல்லம் போடப்பட்டிருக்கிறது என்று தெரிந்ததும் விருந்தினரில் சிலர் முணுமுணுத்தார்கள். இதற்குச் சர்க்கரைப் பஞ்சம் காரணமல்லவென்றும், உடல் நல மந்திரியின் உத்தரவுதான் காரணம் என்றும் தெரிந்தது!

பாலாற்றங்கரையிலே பசுமையான மரங்கள் நிறைந்த சோலையின் மத்தியிலே



"கைத்தறியில் நெய்வது இப்படித்தான்!"

இந்துமத பாடசாலையின் விசாலமான ஆனால் எளிமையான ஓட்டு வில்லைக் கட்டிடங்களும், கூரைக் கட்டிடங்களும், மாணவர் இல்லமும், வள்ளுவர் தொழிற்சாலையும், தேரையர் வைத்தியசாலையும், விருந்தினர் விடுதியும் அழகு பெற்று விளங்குகின்றன. இயற்கையான எளிமை வாழ்வு நடத்துவதற்குத் தகுந்தபடி எல்லாம் அமைந்திருக்கின்றன.

பாலாற்றின் வெண் மணற்பரப்பும், பறவைகளின் இனிய கீதமும், தவழ்ந்து வரும் இளங் காற்றும் நகர வாசிகள் கண்டறியாத குதூகலத்தை அளித்துக் கொண்டிருந்தன.

முதலில் திருவள்ளுவர் தொழிற்சாலைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அங்கே மாணவர்கள் உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் பலவிதமான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நூல் நூற்றல், நெய்தல், தையல் வேலை முதலியவை நடைபெற்றன. ஒன்றுக்கும் உதவாது என்று ஒதுக்கித் தள்ளப்படும் எருமை மாட்டின் கொம்புகளைக் கொண்டு அழகான கொக்குகளையும், கிளிகளையும், மயில்களையும், தலைவாரும் சீப்புக்களையும் செய்து கொண்டிருந்தார்கள். புஸ்தகம் பைண்டு செய்தல், கயிறு திரித்தல், களாய் பூசுதல், காகிதம் செய்தல், பொத்தான் செய்தல் முதலிய வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான தொழில்களை வேறு சில மாணாக்கர்கள் செய்து கொண்டிருந்தனர்.

பின்னர் அருகில் உள்ள தேரையர் மருத்துவசாலையைப் பார்வையிட்டோம். வைத்திய வசதிகள் இருந்தனவே ஒழிய ஒரு வியாதியஸ்தரைக்கூடக் காணோம்! வைத்தியர் மட்டும் மருந்துப் புட்டிகளுக்குக் காவலாக உட்கார்ந்திருந்தார்!

பிறகு, திருவிழாப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். மாணவர் இல்லத்தின் மராமத்து மந்திரி அந்தச் சோலையின் ஒரு பக்கத்தில் அழகிய பந்தலொன்றும் அதில் பிரசங்க மேடையும் அமைத்திருந்தார். அந்தப் பந்தலில் "சுதந்திரா" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ் அவர்களின் தலைமையில் திருவிழா ஆரம்பமாயிற்று.

என்ன திருவிழா என்பதைச் சொல்ல மறந்து விட்டேனே? ட்ரோஜன் கம்பெனி ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார் ஆறு வால்வு உள்ள ரேடியோப் பெட்டி ஒன்றை மேற்படி வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்குப் பரிசாக வழங்கியிருந்தார். அந்தப் புதிய வானொலிப் பெட்டியைக் "கல்கி" ஆசிரியர் திறந்து வைக்கும் திருவிழாதான் இவ்வளவு கோலாகலமாக நடைபெற்றது.

★

விழாவிற்கு வந்திருந்த விருந்தினர் எல்லாரையும் வரவேற்று ட்ரோஜன் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார் பேசினார். மூன்று வருஷத்துக்கு முன்னால் ஒரு கலியாணத்துக்குப் போயிருந்த இடத்தில், உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டு வந்த இந்தப் பாடசாலை மாணாக்கர்கள் தேகப் பயிற்சி விளையாட்டுகள் நடத்தியதைத் தாம் பார்த்ததாயும், அது முதல் இந்தப் பள்ளிக்கூடத்தில் சிரத்தை கொண்டதாயும் குறிப்பிட்டு மேலும் சொன்னார்: "ஒரு வருஷத்துக்கு முன் காமக்கல் கவிஞருடன் நானும் தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலையும் இங்கே வந்திருந்தோம். சின்ன அண்ணாமலை பிரசங்கமாரி பொழிந்தார். வருண பகவான் போட்டி போட்டுக் கொண்டு அசல் மழையையே பொழிந்து விட்டார். அருகில் உள்ள கட்டடத்திற்குச் சென்று கூட்டத்தை நடத்தினோம். அந்த பயம் இப்பொழுது இல்லாமல் முன் ஜாக்கிரதையுடன் இந்த விழாவுக்குப் பந்தல் அமைத்த மராமத்து மந்திரியை வாழ்த்த வேண்டும். நீங்கள் எல்லாரும் இந்த அருமையான ஸ்தாபனத்தைப் பார்த்து மகிழ

வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வானொலித் திறப்பு விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தேன். என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி வந்த உங்கள் எல்லாருக்கும் என் வணக்கம்" என்று சொல்லி விட்டு, வந்திருந்தவர்களுக் கெல்லாம் தனித் தனியாக வரவேற்புக் கூறினார்.

முக்கிய விருந்தினர்களுக்கு அழகிய செந்தமிழ் நடையில் வரவேற்புப் பத்திரங்கள் படித்துக் கொடுத்த பிறகு, விழாத் தலைவர் ஸ்ரீ காஸா சுப்பராவ் பேசினார். "என் தாய் மொழி தெலுங்கு. அதில் பேசினால் உங்களுக்குப் புரியாது. ஆங்கிலத்தில் பேசுவதில் பயனில்லை. ஆகையால் எனக்குத் தெரிந்த கொச்சைத் தமிழிலேயே பேசுகிறேன்" என்று ஆரம்பித்தார். அவர் தமிழில் பேசியதைப் பார்த்தபோது எனக்கு ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது. "யாரும் எந்தக் காரியத்தையும் அன்புடன் செய்தால் சுலபமாகச் செய்து முடிக்கலாம். தெலுங்கு தேசத்திலிருந்து வந்திருந்தாலும் தமிழ் மக்களுடன் அன்புடன் பழக வேண்டும் என்று ஆசைப்பட்டால் தமிழ் பேசுவது சுலபமான காரியம். இதுபோலத்தான் எல்லா விஷயத்திலும்!" என்று ராஜாஜி சொன்னது எவ்வளவு உண்மை என்பதை ஸ்ரீ சுப்பராவ் தமிழ் பேசியதிலிருந்து நன்கு தெரிந்து கொண்டேன்.

"இந்த வள்ளலார் இல்லத்தையும் இந்து மத பாடசாலையையும் இதை நடத்தும் மாசிலாமணி முதலியாரையும் பார்க்கும்போது அரசாங்கத்தார் பள்ளிக்கூடங்களை நடத்தும் லக்ஷணத்தைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. சென்னை மாகாணத்தின் கல்வி மந்திரி ஒருதரம் இந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டாரானால் பள்ளிக்கூடங்களை எப்படி நடத்துவது என்று தெரிந்து கொள்ளலாம். தற்பொழுது நடந்துவரும் கல்வி முறையையே மாற்றி யமைக்க வேண்டும். வயது வந்தவர்களும் தாம் விரும்பும் எந்த விதமான பரீட்சைக்கும் போகும்படி கல்வி முறை அமைய வேண்டும்" என்று ஸ்ரீ சுப்பராவ் கூறினார்.


அவருக்குப் பின் பேசிய ஹிந்தி பிரசார சபை ஸ்ரீ சத்தியநாராயணா ஹிந்தி பாஷையில் பேசினார். "ஹிந்தி பாஷை சக்தியுள்ள பாஷை" என்றுதான் இது வரை நான் நினைத்திருந்தேன். ஸ்ரீ சத்தியநாராயணாவின் பேச்சை அன்று கேட்டதிலிருந்து "ஹிந்தி இனிமையான பாஷை" என்றும் தெரிந்தது. இவ்வளவு நல்ல முறையில் நடக்கும் பள்ளிக்கூடத்தில் மாணாக்கர்கள் தேசிய பாஷையைக் கற்றுக் கொள்வது அவசியம் என்றும், அதற்கு 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியார் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் ஸ்ரீ சத்தியநாராயணா கூறினார். பிறகு தமிழ் "ஹரிஜன்" ஆசிரியர் ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளை பேசினார்:—

"பத்து வருஷங்களுக்கு முன்னால் 'பாலாறும் பகற் கனவும்' என்ற ஆசிரியர் கல்கி அவர்களின் கட்டுரையைப் படித்ததிலிருந்து எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. இப்பொழுது கல்கி ஆசிரியர் கூடவே இதைப் பார்ப்பதில் எனக்குப் பரம சந்தோஷம். ஆனால் அத்துடன் ஒரு வருத்தமும் ஏற்பட்டிருக்கிறது. 'எனக்கு வயசாகி விட்டதே! இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க முடியாதே!' என்பதுதான் அந்த வருத்தம்" என்று கூறியதைச் சபையோர் வெகுவாக ரசித்துக் கரகோஷ ஆரவாரம் செய்தார்கள்.

★

விழாவின் தலைவர் ஸ்ரீ சுப்பராவ், வானொலிப் பெட்டியைத் திறந்து வைக்கும்படி ஆசிரியர் கல்கியைக் கேட்டுக்


"பொம்மை வேணுமா, பொம்மை!"



கொண்டதும் "கல்கி" ஆசிரியர் எழுந்தார்.

"இந்த வானொலிப் பெட்டியைத் திறந்து வைக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். இந்த மேடையில் வந்து உட்கார்ந்தது முதல் அதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தப் பெட்டிக்குக் கதவு எங்கே இருக்கிறது, முன் பக்கத்திலா, பின் பக்கத்திலா, பக்கவாட்டிலா என்று அப்போ இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்படியும் தெரியவில்லை. இந்தப் பெட்டி ரொம்பப் பொல்லாத பெட்டி. கையை வைக்கக் கூடாத இடத்தில் வைத்து விட்டால் தேள் கொட்டுவது போலக் கொட்டிவிடும். ஆகையால் தயவு செய்து யாராவது கதவு இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துச் சொன்னால் உபகாரமாயிருக்கும்!" என்று சொல்லி வந்தபோது சபையில் ஒரே சிரிப்பும் கொம்மாளமுமாயிருந்தது. "பார்த்தீர்களா? நீங்கள் எல்லாரும் இப்படி என்னைப் பார்த்துக் கைதட்டிச் சிரிக்கும் நிலைமை இந்தப் பள்ளிக்கூடத்தில் நான் படித்திருந்தால் ஏற்பட்டிராது!" என்று சொன்னதும் மறுபடியும் கூட்டத்தில் குதூகலம் உண்டாயிற்று.

கைத்தொழில் மூலமாகவே குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று காந்திமகான் புதிய கல்வித் திட்டத்தை ஆரம்பித்திருப்பதையும், அதே காரியத்தை இந்தப் பாடசாலையில் எத்தனையோ வருஷத்துக்கு முன்னாலிருந்து ஓரளவு நிறைவேற்றி வருவதையும் கல்கி ஆசிரியர் குறிப்பிட்டு, பத்து வருஷத்துக்குள்ளே பள்ளிக்கூடம் அடைந்திருக்கும் அபிவிருத்தியைப் பாராட்டினார்.



"வாருங்கள்! வாருங்கள்! பொத்தான் செய்வதைப் பாருங்கள்!"

ஸ்ரீ மாசிலாமணி முதலியார் தன்னந்தனியாக முயன்று இத்தகைய மகத்தான பணியை நிறைவேற்றிவருவதைக் குறித்து அவரை வாழ்த்தினார். தாம் பார்த்திருக்கும் பல கல்வி ஸ்தாபனங்களுக்குள்ளே மகாகவி தாகூரின் சாந்தி நிகேதனத்துடனே தான் இந்தப் பாடசாலையை ஒப்பிடலாம் என்று சொல்லிப் பின்வரும் சம்பவத்தைக் கூறினார்:—

"நானும் இதோ வீற்றிருக்கும் ஸ்ரீ இக்னேஷியஸ்* அவர்களும் பல வருஷங்களுக்கு முன்னால் உலகப் புகழ் பெற்ற கவி டாகூரின் சாந்தி நிகேதனத்தைப் பார்க்கச் சென்றிருந்தோம். அப்பொழுது சாந்தி நிகேதனத்தில் டாகூர் இல்லை; ஆனால் அவருடைய பிரதம சிஷ்யரான ஆசிரியர் ஆண்ட்ரூஸ் இருந்தார்.

'நீங்கள் எல்லாம் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று ஆண்ட்ரூஸ் கேட்டார்.

'சென்னைப் பட்டணத்திலிருந்து வருகிறோம்' என்று சொன்னோம்.

உடனே ஸ்ரீ ஆண்ட்ரூஸ் 'ராஜாஜி பிறந்த மாகாணத்திலிருந்தா?' என்று கேட்டுக் கொண்டே நமது இக்னேஷியஸ்ஸை அப்படியே கட்டி ஆலிங்கனம் செய்து கொண்டார்! ஆனால் இப்பொழுது இருப்பதுபோல இக்னேஷியஸ் அப்பொழுது சுற்றுவாட்டில் வளர்ந்திருந்தால் அவரால் அப்படிக் கட்டிக் கொண்டிருக்க முடியாது!" என்று ஆசிரியர் கல்கி சொன்னவுடன் எல்லாரும் இக்னேஷியஸ்ஸைப் பார்த்து ஆரவாரிக்க ஆரம்பித்து விட்டனர்.

(அடுத்த இதழ் முடியும்)

* ஸ்ரீ இக்னேஷியஸ் கொச்சியைச் சேர்ந்த கிறிஸ்தவர். இவர் 1921-ல் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டு தமிழ் நாட்டில் தீவிர தொண்டு செய்தவர். இப்போது ஜயபாரதம் கம்பெனி நடத்தி, எழுதும் மசி, கூந்தல் தைலம், வாஸலின், ஸ்நோ முதலிய 'ஜாப்கோ' பொருள்களை உற்பத்தி செய்து, பல்லாயிரக் கணக்கான ரூபாய் அயல் நாடுகளுக்குப் போகாமல் தடுத்து வருகிறார்.

திருச்சி நேஷனல் காலேஜ்

வைரவிழாக் கொண்டாட்ட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஞாயிற்றுக்கிழமை

20 - 10 - 1946

மாலை 6 மணிக்கு

★

திருச்சி முருகன் டாக்கீஸில்

★

சங்கீத ரத்ன மைசூர் டி. சௌடய்யா	—	பிடில்
கல்பாத்தி ராமநாதன்	—	மிருதங்கம்
கோயமுத்தூர் ராஜப்பையர்	—	கஞ்சிரா
ஆலங்குடி ராமச்சந்திரன்	—	கடம்

★

டிக்கட்டுகள் :

ஆதரவாளர் ரூ. 250/- ரூ. 100/- ரூ. 25/- ரூ. 10/-

எல். என். எஸ். மணி

காரியதரிசி, வைரவிழாக் கமிட்டி.

ஒரு பொய்

பி. எஸ். அலமேலு

ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு வனஜா ஏதோ பூவேலை செய்து கொண்டிருந்தாள். மாலைச் சூரியனின் மனோகரப் பொன்னொளியிலே அவளது அழகிய முகம் இன்னும் அதிக சோபையடைந்தது. அத்துடன் யாருக்காக அந்தக் கைக்குட்டையில் அவள் அழகு வேலை செய்து கொண்டிருந்தாளோ, அந்த இன்முகமும் அவள் முன்னால் நிற்பதுபோல் தோன்றவே அவள் வதனம் முன்னிலும் அதிக ஆனந்தத்துடன் மலர்ந்தது.

"என்ன தைத்துக் கொண்டிருக்கிறாய், வனஜா?" என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய தாயார் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள்.

"ஒன்றுமில்லை, அம்மா! ஒரு கைக்குட்டையில் பூக்கள் தைத்துக் கொண்டிருக்கிறேன்!"

"விடிந்தால் தீபாவளி; இன்னும் எத்தனையோ வேலைகள் பாக்கியிருக்கு! இந்தத் தையல் வேலையைச் சாவகாசமாகச் செய்து கொள்ளலாமே!"

"இதோ வந்துவிட்டேன், அம்மா!"

"எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டுத் தீபத்தையும் பொருத்திக் காட்டிவிட்டுக் கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துகொண்டு வா!"

"கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துகொண்டு வா!" என்று தாயார் கூறியது அவள் மனதைப் பூரிக்கச் செய்தது. தான் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் சுபமாக முடிவதற்கு அது ஒரு நற்சகுனமாகத் தோன்றவே பொங்கி வழியும் ஆனந்தத்துடன் அவள் கை விரல்களை வேகமாய் ஓட்டினாள். அவள் இதயம் மலர்ந்ததைப் போலவே கைக்குட்டையிலும் பல விதமான புஷ்பங்கள் மலர்ந்தன.

★

தீபாவளியன்று பின்னிரவு. ஏதோ உள்ளச் சோர்வுடன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் ராஜு.

"அப்பா, ராஜு! எழுந்து வா, எண்ணெய் ஸ்நானம் செய்ய!" என்று கூப்பிட்டாள் அவன் தாயார் கோமளம்.

"இப்போது என்ன அம்மா, அவசரம்? இன்னும் சற்றுப் பொறுத்துத்தான் குளிக்கிறேனே!"

"ஏண்டா, நல்ல நாளும் அதுவுமாக அலுத்துக் கொள்கிறாய்? வெந்நீர் ஆறிவிடும். சீக்கிரம் எழுந்து வா!"

ராஜு வேண்டா வெறுப்பாக எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

எல்லாரும் ஸ்நானம் செய்து விட்டார்கள். கூடத்தின் நடுவில் குத்து விளக்கைப் பொருத்தி வைத்திருந்தது. ராஜுவின் தகப்பனார் தாம்பாளத்திலிருந்து புது வஸ்திரங்களை எடுத்து அவரவர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

உணர்ச்சியற்ற யந்திரம்போல் ராஜுவும் ஸ்நானம் செய்துவிட்டு வந்து தன் வஸ்திரத்தை வாங்கிக் கொண்டான்.

அவன் உள்ளம் அப்போது பழைய நினைவுகளால் குமுறிக் கொண்டிருந்தது. "ஆகா! போன தீபாவளி எவ்வளவு குஷியாக நடந்தது! தீபாவளிக்கு முன் தினமே மாமா, மாமி, வனஜா எல்லாரும் வந்துவிட்டார்கள். அப்பா ஒரு பட்டுச் சிற்றாடையை எடுத்து அம்மாவிடம் கொடுத்தார். அம்மா அதைப் பிரித்து வனஜாவிடம் கொடுத்தாள். அவள் அதை வாங்கிக்கொண்டு புன்னகை தவழ அம்மாவுக்கு நமஸ்காரம் செய்தாள். "மனதிற்குப் பிடித்த கணவனை அடைந்து சுகமாயிருப்பாய்!" என்று அம்மா அவளை மனமார ஆசீர்வாதம் செய்தாள். வெட்கத்தால் தன் கன்னங்கள் சிவக்க வனஜா அந்தச் சிற்றாடையுடன் பக்கத்திலுள்ள அறைக்கு ஓடிவிட்டாள். அப்போது ஜிவ்வென்று சிவந்த அவளது ரோஜாக் கன்னங்கள்தான் எவ்வளவு அழகாக இருந்தன!" என்றெல்லாம் எண்ணி அலைமோதியது ராஜுவின் உள்ளம்.

மனதின் கொந்தளிப்பு அவ்வப்போது முகத்திலும் பிரதிபலிப்பதைக் கவனித்த அவன் தந்தை சுப்பராமய்யர், "என்னடா, ராஜு! ஏன் ஒரு மாதிரியாய்

இருக்கிறாய்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்று விசாரித்தார்.

ராஜு ஒன்றும் பேசாமல் உம் கொட்டி மௌனம் சாதித்தான்.

ஆனால் சுப்பராமய்யர் வற்புறுத்திக் கேட்கவே, "உடம்புக்கு ஒன்றுமில்லை, அப்பா! மனதிற்குத்தான் சந்தோஷமில்லை. சென்ற வருஷம் நடந்த குதூகலத் தீபாவளிக்கும் இந்த வருஷம் நடக்கும் சூனியத் தீபாவளிக்கும் எவ்வளவு வித்தியாசம்!" என்றான்.

அவனுடைய வார்த்தைகள் கோமளத்திற்குக் கோபத்தை மூட்டின. "ஏண்டா, என்ன குறையைக் கண்டுவிட்டாய்? நல்ல நாளும் அதுவுமாகச் சூனியநாள் என்கிறாயே?" என்று சினந்தாள்.

ராஜுவுக்கும் சிறிது கோபம் மூளத்தான் செய்தது. "ஏன் அம்மா சூனியமாயில்லை? முன் வருஷங்கள்போல் இல்லாமல் இம்முறை மட்டும் மாமா அகத்தினர் வராதது குறையாகத் தோன்றவில்லையா, உனக்கு? அப்பாதான் வைராக்கியம் பாராட்டுகிறார் என்றால் உனக்குமா இப்படிச் சொந்தத் தமையன் மீதும் அவருடைய குழந்தைகள்மீதும் விரோதம் தோன்றும்? முன்பெல்லாம் 'வனஜா, வனஜா!' என்று உயிரை விடுவாயே! குழந்தைக்கு இதைக்கொடுக்கவேண்டும், அதைக் கொடுக்கவேண்டும் என்று பறப்பாயே! இப்போது அந்தப் பாசமும் பரிவும் எங்கே போய் விட்டது? பணத்தின் முன்னால் பந்தமும் பாசமும் பறந்து போச்சா? கேவலம், நூறு ரூபாய்ப் பிச்சைக் காசுக்காக அவ்வளவு அன்னியோன்யமாயிருந்த இரண்டு குடும்பங்களும் ஒரேயடியாய் இப்படியா பிரிந்து போவது?" என்றான் உணர்ச்சி தாங்காமல்.



"ஆமாண்டா, ஆமாம்! நீ ரொம்பப் படித்தவன். உன்னத்தனை தத்துவ ஞானமும் பக்குவமும் எங்களுக்கு இன்னும் வரவில்லை!" என்று ஏகத்தாளம் செய்தார் சுப்பராமய்யர்.

ராஜு ஒன்றும் பேசாமல் 'விர்'ரென்று தன் அறைக்குப்போய் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் எவ்வளவு நேரம் சிந்தனை லோகத்தில் திரிந்து கொண்டிருந்தானோ தெரியாது. "மாமா, இந்தப் பொட்டணத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்!" என்று யாரோ சொல்வது கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். கோடி வீட்டுக் கோபுப் பயல் அவன் கையில் ஒரு சிறு காகிதப் பொட்டணத்தைக் கொடுத்து விட்டு வேகமாய் வெளியே சென்றான்.

ஆச்சரியமடைந்த ராஜு ஆவலுடன் பொட்டணத்தைப் பிரித்தான். அதனுள் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்த கண்ணைக் கவரும் கைக்குட்டை ஒன்று இருந்தது. அதைக் கண்டதும் அவனுடைய நயனங்கள் ஆனந்தத்தால் விரிந்தன. கைக் குட்டையைப் பிரித்ததும் ஒரு சின்னஞ் சிறு துண்டுக் கடிதம் கீழே விழுந்தது.

"அன்புள்ள அத்தானுக்கு,

சென்ற தீபாவளி எவ்வளவோ குதூகலமாகக் கழிந்தது! இந்த வருஷம் அந்தகைய பாக்கியம் நமக்குக் கிட்டவில்லை. ஆனாலும் இந்த அற்பப் பொருளை என் அன்புக் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

வனஜா."

கடிதத்தைப் படித்து முடித்ததும் ராஜு ஏதோ இன்பத்தில் ஆழ்ந்தவனாய்க் கைக்குட்டையைப் பிரித்து முகத்தில் ஒத்திக் கொண்டான். அவன் கண்களிலிருந்து உதிர்ந்த இரண்டு நீர் முத்துக்கள் அதன்மேல் உருண்டு ஓடின!

★

அன்று மாலை கூடத்தில் உட்கார்ந்து விளக்குக்கு எண்ணெய்த் திரியிட்டுக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டிருந்தாள் வனஜா. வாசலில் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். மறுகணம் அவளுடைய கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. "அத்தான்! கடைசியில் இங்கு வர வழியும் தெரிந்ததா!" என்றாள்.

உள்ளே நுழைந்த ராஜு தன் கண்களைச் சுற்றிலும் ஒரு முறை சுழற்றிப்

பார்த்துவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தான்.

அவனுடைய மௌனம் வனஜாவுக்கு வேதனையை யளித்தது. "போகட்டும், அத்தான்! இந்த ஆறு மாதங்கள் பொறுத்தாவது ஏழை அம்மங்கார் ஒருவர் இருப்பது நினைவு வந்ததே! அந்தமட்டும் எங்கள் பாக்கியமே!" என்றாள்.

ராஜு அவளை நிமிர்ந்து பார்த்தான். நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு, "என்ன செய்வது, வனஜா! நம் பெற்றோர்களின் இஷ்டப்படிதானே நாம் நடக்க வேண்டியிருக்கிறது? ஆனாலும் இன்று காலை நீ அனுப்பிய அன்புப் பரிசுக்கு நன்றி கூறாதிருப்பது சரியாகுமா? மேலும் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் நான் உன்னிடம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் ஐந்தாறு நாட்களில் நான் ராணுவத்தில் சேர்ந்து வடநாட்டுக்குப் போவதாக உத்தேசம். மறுபடியும் எப்போது வருவேன் என்று சொல்ல முடியாது. போகுமுன் கடைசியாக உன்னிடம் விடை பெற்றுக் கொள்ளவே வந்தேன்!" என்றான்.



வனஜாவின் கண்களில் நீர் துளித்தது. "அத்தான்! இன்னும் ஐந்தாறு நாட்களுக்குள்ளாகவா போகப்போகிறீர்கள்? அதுவும் வடநாட்டிற்கா!" என்று விம்மினாள்.

"எனக்கென்னவோ வரவர வெறுப்புத்தான் அதிகமாகிறது. நம்மவர்களின் குணமும் நடவடிக்கைகளும் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை!" என்றான் ராஜு.

ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் உள்ளே ஓடிய வனஜா, சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு வெள்ளித் தட்டு நிறையத் தீபாவளி பக்ஷணங்களும், ஒரு டம்ளரில் தீர்த்தமும் கொண்டு வந்து ஊஞ்சலின் மீது வைத்துவிட்டு, "அத்தான்! தங்களுக்கு இந்த அபலை அளிக்கும் பிரிவுபசார விருந்து இதுதான்!" என்றாள்.

"ஆகா! இத்தகைய அன்பு விருந்து நடந்துதான் எத்தனை நாட்களாகி விட்டன!" என்று ஆனந்தமாய்ச் சொல்லிக்கொண்டே தட்டை அருகில் இழுத்து வைத்துக் கொண்டான் ராஜு.

சாப்பிட்டு முடிந்ததும், "வனஜா! விதி என்று ஒன்று இருக்கிறது என்றும், யாவும் அதன் முடிவுப்படியே நடக்குமென்றும் நாம் இருவரும் உறுதியாக நம்பியிருப்போம்" என்று சொல்லி விட்டு, அந்த வீட்டை விட்டு வெளியேறினான் ராஜு. அவன் தெருக்கோடியில் மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் வனஜா.

★

"ஏன்னா! இப்படியே பேசாமல் உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்? பையன் வீட்டை விட்டுப் போய் இரண்டு வருஷம் ஆகிறதே. நீங்களாவது ஒரு முறை போய்க் குழந்தையைப் பார்த்து விட்டு வரக்கூடாதா? ஏதோ காலா



காலத்தில் ஒரு கால் கட்டையும் அவனுக்குக் கட்டிப் போட்டால்தானே...'' என்று தன் கணவனிடம் ஒரு நாள் ஆரம்பித்தாள் கோமளம்.

"என்னடி இது! நீ பாட்டுக்கு அடுக்கிக்கொண்டே போகிறாயே! நான் மட்டும் சும்மாவா இருக்கிறேன்? எழுதும் கடிதங்களுக்கு அவன் பதில்கூடப் போடுவதில்லை. கலியாண விஷயத்தைக் குறித்து எழுதினால், 'கல்யாணம் செய்து கொண்டால் மைத்துனன் என்று ஒருவன் ஏற்படலாம். பிறகு மனஸ்தாபம் என்றும் தோன்றும். கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருந்து விட்டால் வம்புக்கு இடமேயில்லையல்லவா?' என்று ஏகத்தாளம் செய்கிறான்! என்ன அதிகப்பிரசங்கித்தனம்!'' என்றார்.

அதே சமயம் வாசலிலிருந்து "ஸார், தபால்!'' என்ற குரல் கேட்கவே, சுப்பராமய்யர் எழுந்து வெளியே வந்தார். தபால்காரன் அவர் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

பூனா..............

"உபயகுசலோபரி, நமஸ்காரம். தங்கள் புதல்வன் சிரஞ்சீவி ராஜுவின் ஜாதகம் என் சகோதரன் பெண்ணுக்கு நன்றாகப் பொருந்தியிருக்கிறது. பெண்ணின் தகப்பனார் இங்கு உத்தியோக மாறுதலாய் வந்து இரண்டு மாதமாகிறது. பெண்ணும் தற்போது பெற்றோருடன் இங்கேயேதான் இருக்கிறாள். ராஜு பெண்ணை நேரில் பார்த்திருக்கிறான். அவனுக்கும் பெண்ணைப் பொறுத்த வரையில் பூரணத் திருப்திதான்.

இனி பாக்கி விஷயங்களும் தீர்மானமாகிவிட்டால் அடுத்த முகூர்த்தத்திலேயே விவாகத்தை நடத்திவிடலாம். ஆகவே, தங்கள் அன்பார்ந்த பதிலை எதிர்பார்த்து நிற்கிறேன்.

இங்ஙனம்:

கிருஷ்ணய்யர்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் கோமளத்தின் உடல் ஆனந்தத்தால் பூரித்தது. "ஏதோ இந்த மட்டும் பையனுக்குப் பெண்ணைப் பிடித்திருப்பது பெரியவர்கள் செய்த பாக்கியம் தான். என்னமோ, அன்று குழந்தையையே பண்ணிக் கொண்டு விடலாமென்று எண்ணிக் கொண்டிருந்தோம். அவனும் "வனஜா, வனஜா!'' என்று உயிராக இருந்து வந்தான். போதாத காலத்திற்கு மனஸ்தாபம் ஒன்று குறுக்கே முளைத்தது. அதோடு அண்ணனும் உத்தியோக மாற்றுதலாகி ஊரை விட்டே போய்விட்டான். ஒரு வருஷமாக அவன் இருக்கிற இடம்கூடத் தெரியவில்லை. போகட்டும், எல்லாம் நன்மைக்குத்தான் என்பார்கள். ஏதோ கல்யாணப் பேச்சை எடுத்ததும் சுபமாகக் கல்யாணக் கடிதாசே வந்திருக்கிறது. நல்ல சகுனம் தான்; மறு தபாலிலேயே பதில் எழுதிப் போட்டு விடுங்கோ!'' என்று தன் கணவனைத் தூண்டினாள் கோமளம்.

"அம்மாளின் ஆக்ஞைக்கு எதிர்ப்பும் உண்டோ?'' என்று சொல்லிக் கொண்டே, ஐயரும் பேனாவையும் மைக் கூடையும் தேடிக்கொண்டு போனார்.

★

நடுவில் தார் போட்ட ரஸ்தாமீது வாடகைக் கார் ஒன்று 'விர்'ரென்று பறந்து கொண்டிருந்தது. "ஸாக்ஷாத் கிருஷ்ணபரமாத்மாதான் இப்படிக் கிருஷ்ணய்யராக வந்திருக்கிறார் போலும்!'' என்ற சிந்தனையில் தன்னையும் மறந்து சென்ற கோமளம் கார் நின்றதைக்கூட அறியவில்லை.

"மாப்பிள்ளை, வாருங்கள்!'' என்று வரவேற்றவரின் குரலைக் கேட்டுக் கோமளம் திரும்பிப் பார்த்தாள்.

வீட்டு வாசலில் தன் தமையன் நாராயணய்யர், தம் மனைவியுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டவளாய்த் தன் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவர் ஒன்றும் விளங்காமல் ராஜுவின் முகத்தைப் பார்த்தார். அவன் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

கிருஷ்ணய்யர் அவருடைய முகமாறுதலைக் கவனித்துவிட்டு, "என்ன, பார்க்கிறீர்கள்? அதெல்லாம் சாவகாசமாகப் பேசிக் கொள்வோம். வாருங்கள், முதலில் உள்ளே போய்க் கை கால்களைக் கழுவிக் கொண்டு காப்பி சாப்பிடுவோம்!" என்று சொல்லிக் கொண்டே சுப்பராமய்யரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்.

காப்பி சாப்பிட்டபின் பாயின்மீது மூவரும் அமர்ந்தனர்.

"என்ன, மேற்கொண்டு எப்படி எப்படி செய்ய வேண்டுமென்று முடிவு செய்து விடலாமே!" என்றார் கிருஷ்ணய்யர், சுப்பராமய்யரையும் நாராயணய்யரையும் பார்த்து.

சுப்பராமய்யருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "என்ன ஓய்! கடைசியில் பொய் சொல்லியல்லவா என்னை ஏமாற்றி விட்டீர்?" என்று சீறினார்.

"கோபித்துக் கொள்ளக் கூடாது. 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணத்தைப் பண்ணி வை!' என்று நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்! நான் ஒரு பொய்தானே சொன்னேன்? மேலும் நாராயணய்யர் எனது நெடுநாளைய நண்பர். அவரை நான் என்னுடைய சகோதரராகவே பாவிக்கிறேன். ராஜு என்னிடம் எல்லாவற்றையும் சொன்னான். பார்க்கப்போனால் நாம் எதற்காகச் சிரமப் படுகிறோம்? எல்லாம் நமது குழந்தைகளின் க்ஷேமத்தை உத்தேசித்தேயல்லவா? அவர்கள் இருவர் மனமும் ஒன்று சேர்ந்தபின், கேவலம் நமக்குள் இருக்கும் அற்ப மனஸ்தாபம் இதில் குறுக்கே நிற்க வேண்டுமா? நான் செய்தவை தவறாக இருந்தால் பெரியவர்கள் மன்னித்துக் கொள்ளுவார்களாக!" என்று மங்களம் பாடித் தமது பிரசங்கத்தை முடித்தார் கிருஷ்ணய்யர்.

மந்திரத்தில் கட்டுண்ட நாகப் பாம்பு போல் ஏதும் சொல்ல வகையறியாது விழித்தார் சுப்பராமய்யர். அதற்குள் சமையல் அறையில் நாத்தனாரும் மதனியும் குலாவும் குரல் அவர் செவியில் விழுந்தது. அதுதான் சமயமென்று கிருஷ்ணய்யரும் அன்றே நிச்சயதார்த்தம் செய்து விடுவதற்காகப் புரோகிதரைத் தேடிக் கொண்டு வெளியே சென்றார்.


★

அடுத்த தீபாவளி யன்று சுப்பராமய்யர் வீட்டு வாசலில் வாத்தியக்காரன் ஜாம் ஜாம் என்று முழங்கிக் கொண்டிருந்தான்.

"ரோசனோ ரோசமான: சோபன: கலியாணஹ" என்று புரோகிதர் மந்திரம் உச்சரிக்க, கோமளம்மாள் ஒரு தட்டில் மஞ்சள் தடவி வைக்கப்பட்டிருந்த புடவையை எடுத்து வனஜாவிடம் கொடுத்தாள்.

"அம்மா! இந்தத் தடவையாவது ஜாக்கிரதையாக ஆசீர்வாதம் செய். மூன்றும் தீபாவளி யன்று நீ செய்த ஆசீர்வாத பலத்தால்தானே இப்போது இந்தப் பிடிக்காத தீபாவளியைக் கொண்டாடுகிறாய்!" என்றான் ராஜு சிரித்துக்கொண்டே.

"அம்மா, வனஜா! அடுத்த வருஷத்திற்குள் நீ ஒரு புத்திரனைப் பெற்று இந்தக் குறும்பனிடம் கொடுத்து இவனைப் படாத பாடு படுத்தி வைப்பாயாக!" என்று கோமளம் தன்னை நமஸ்கரித்த வனஜாவை ஆசீர்வதித்தாள்.


VINOLIA
WHITE ROSE SOAP
அதிகாலையில் தோட்டத்தில் அழகான இந்திய ரோஜா முதல் முதலாக மலரும்பொழுது . . . உங்களுக்கு வினோலியா ஒயிட்ரோஸின் நினைவுகள் ஏற்படுகின்றன. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது—மேலும் மிக மெல்லிய சருமத்தையும் சுகமாகச் சுத்தம் செய்கிறது. அழகை மென்மேலும் அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச் சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது.
வினோலியா ஒயிட் ரோஸ் சோப்
VWR. 22-23 TM
VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND.



கம்பனுடன் இரண்டு நாள்

[ஒரு நிருபர்]

"கம்பன் அதிர்ஷ்டம் கெட்டவன். நல்ல அதிர்ஷ்டம் உடையவன் என்றால் தமிழ் நாட்டில் வந்து ஏன் பிறக்கிறான்?" என்று கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு பேராசிரியர் அங்கலாய்த்துக் கொண்டார். அந்த ஆசிரியர் இன்று ஜீவியவந்தராக இல்லை. அவர் மட்டும் இன்று ஜீவியவந்தரா யிருந்து, 12-10-46, 13-10-46 தேதிகளில் திருநெல்வேலியில் நடந்த கம்பன் திருநாளைப் பார்த்திருப்பாரேயானால் "நான் சொன்னதெல்லாம் தப்பு, தப்பு!" என்று தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பார்.

"இருபது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் கம்பன் அதிர்ஷ்டம் கெட்டவனாக இருந்திருக்கலாம். ஆனால் என்று ரஸிகமணி டி. கே. சி. யை மனோகரமாக கரம் பிடித்ததோ, என்று அவர் கம்ப ராமாயணத்தைக் கருத்தூன்றிப் படிக்க ஆரம்பித்தாரோ, அன்றே கம்பன் பாக்கியசாலி! காரைக்குடி சா. கணேசன் என்று கம்பன் புகழ் பாடி, கன்னித் தமிழ் வளர்க்கும் தொண்டில் ஈடுபட்டாரோ அன்றே கம்பன் பாக்கியசாலி! டாக்டர் டி. என். திருமூர்த்தி என்று தம்முடைய 'ரிடையர்டு' வாழ்க்கையில் கம்பனிடத்தில் வந்து சரண் புகுந்தாரோ அன்றே கம்பன் பாக்கியசாலி!" என்று வரவேற்புரை நிகழ்த்திய தமிழ் அன்பர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் பேசி முடித்ததும் எழுந்த கரகோஷம் வானத்தையே கிடுகிடென்று ஆடும்படி செய்தது.

"கம்பனுக்குத் திருநாள் என்று நடத்துவது?" என்பது பெரிய பிரச்னை அல்ல. கம்பன் பிறந்த ஊராகிய தேரழுந்தூரும், அவன் சமாதி கொண்டிருக்கும் நாட்டரசன் கோட்டை, அதை அடுத்த காரைக்குடியிலும் அவன் காவியம் அரங்கேறிய இடமாகிய பங்குனி அத்தத்திலே நடைபெறுகிறது சிறப்பாக. நடைபெறட்டும். வருஷத்தில் மீதம் 364 நாட்கள் இருக்கத்தானே செய்கின்றன! தமிழ் நாட்டார் அந்த 364 நாட்களையும் பயன்படுத்திக் கொள்ளட்டுமே என்கிற மனப்பான்மையோடுதான் திருநெல்வேலி விழா நவராத்திரி உற்சவத்தை ஒட்டி நடைபெற்றிருக்கிறது.

விழா நடந்த இந்த இரண்டு தினங்களில் கவிச் சக்கரவர்த்தி கம்பரே தம் பூத உடலை நாட்டரசன் கோட்டைச் சமாதியில் விட்டு விட்டுப் புகழுடம்புடன் வந்து திருநெல்வேலியில் கூடிய தமிழ் அன்பர்களிடையே பிரசன்னமாயிருந்தார் என்றால் அது மிகையல்ல. ஏராளமான செலவில் தயாரிக்கப்பட்ட கம்பர் படம் காரைக் குடியிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தது. கம்பர் திருவுருவமும் அவர் எழுதிய ராமாயணச் சுவடிகளும் யானைமீது அம்பாரியில் ஏற்றப்பட்டுத்

தலைவர்கள், பெரியவர்கள், மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருமாக, 'கம்பன் புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க! வாழ்க! வாழ்க!' என்று கட்டியம் கூறிக்கொண்டு செல்ல, ஊர்வலம் ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் சன்னிதியிலிருந்து விழா நடந்த இந்து கலாசாலைக்கு வந்து சேர்ந்தது. ஊர்வலத்தைத் தலைமை தாங்கி முன்னின்று நடத்தியவர் காரைக்குடி சா. கணேசன் என்றால் ஊர்வலத்தைப் பற்றிப் பல சொல்வானேன்?

கம்பன் திருநாளில் தலைமை தாங்கியவர் ரசிகமணி டி. கே. சி; விழாவைத் திறந்து வைத்தவர் டாக்டர் திருமூர்த்தி; விழாவில் பேசியவர்கள் உடுமலைப்பேட்டை வித்வான் தமிழரசு முகம்மது, திரு. ஏ. சி. பால்நாடார் முதலியோர். சரிதான். வட இந்தியாவில் எங்கெல்லாமோ ஜாதியின் பெயராலும் சமூகத்தின் பெயராலும் சண்டைகளும் சச்சரவுகளும், வெட்டுக்களும் குத்துக்களும் நடக்கும்போது இந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்துவர் எல்லோரும் சேர்ந்து கம்பன் விழாவைச் சிறப்பாக நடத்துவது என்றால் அது எவ்வளவோ பாராட்டுவதற்குரியது தானே? கலை ஒன்றுதான் எல்லா வெறுப்பு வாதங்களையும் அழித்து விடக்கூடும் என்றல்லவா காட்டிவிட்டார்கள் இந்தத் திருநெல்வேலிக்காரர்கள்?

விழா இரண்டு நாள் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து கம்பன் கவி அமுதத்தை உண்டு களித்தார்கள். பெரியவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு மாணவ மாணவிகளும் விழாவில் கலந்து கொண்டார்கள். மிதிலை நகரில் இராமன், கங்கைக் கரையில் குகன், அசோக வனத்தில் சீதை என்ற மூன்று பொருள்களையும் பற்றி முப்பது மாணவ மாணவிகள் பேசி வெளுத்து வாங்கி விட்டார்கள். கம்பன் பாடல்களை எப்படி எப்படி எல்லாம் பாடலாம், அனுபவிக்கலாம் என்பதைக் கண்டோம்.

விழாவிற்கே சிகரம் வைத்தது போல் ஸ்ரீ ச. கெ. ராமகிருஷ்ணப் பிள்ளை இரண்டு தினங்களிலும் கம்பன் பாடல்களை — பல பகுதிகளை உணர்ச்சியுடனும் பாவத்துடனும் பாடினார். ஒவ்வொரு நடையையும் அவர் வாங்கிய 'அப்ளாஸ்' பிரமாதம்.

'எந்நீக்கும் போற்றும் இராமன் திருக்கதையை
நீந்நீக்கும் செந்தமிழில் செய்தளித்து
—நித்தமுமே
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த
கம்பன் கவியே கவி!'

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடினார். அதையொட்டி, "திருநெல்வேலிக்காரர்கள் நடத்துகிற கம்பன் விழாவே விழா!" என்று சொல்லத் தோன்றுகிறது.

[கடைசி வாக்கியத்தைச் செட்டிநாட்டுத் தமிழ் அன்பர்களும் சென்னைத் தமிழ் அன்பர்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தங்கள் தங்கள் ஊரில் நடந்த கம்பர் விழாவே விழா என்றுதான் சொல்வார்கள். சொல்லிக் கொண்டு போகட்டுமே! கம்பருக்கு அதிர்ஷ்டம் பிறந்திருப்பது இப்படிப்பட்ட போட்டியின் மூலமாகத்தானே வெளியாக வேண்டும்? —ஆசிரியர்.]



கண் நிறைந்த கணவன்

கிரிஜா

"கை நிறைந்த பொன்னைக் காட்டிலும் கண் நிறைந்த கணவனே மேல்" என்று சொல்லுவார்கள். எனக்குக் கை நிறைந்த பொன்னுடன் கண் நிறைந்த கணவரும் கிடைத்தார்!

மணவறையில் எங்களைக் கண்டு இளம் உள்ளத்தவர்கள் பொறாமையால் அடிக்கடி பெருமூச்சு விட்டனர்; "திருஷ்டி படாமல் இருக்க வேண்டுமே!" என்று பெரியோர் கவலையடைந்தனர். அந்தக் கோலாகல வைபவங்களுக்கிடையில்தான் நான் மிகப் பெருமையோடு அவருடைய கைகளைப் பற்றினேன். அந்த நிமிஷமே, ஆகாய விமானத்தில் இருவரும் அமர்ந்து ஆனந்த பவனி வரவேண்டும் — ஆகாய வீதியில் அவருடன் தனிமையில் பறந்து இன்புற வேண்டும் என்றெல்லாம் துடித்துப் பறந்தது என் இளமை யுள்ளம். ஆனால், சட்டை வண்டி வேகத்தில் செல்லும் பெரியோர்களின் கட்டுப்பாட்டிற்குப் பணிந்து அவரைக் கொஞ்சம் நான் பிரிந்து இருக்கும்படியே நேர்ந்தது.

பிரிவு என்னும் துன்பத்தைத் தந்த அந்த இடைக்காலத்தில்தான் என் மனம் என்னென்ன கோட்டைகள் கட்டின! அவருடன் ஆரம்பிக்கப் போகும் புது வாழ்வில் எப்படியெல்லாம் நடந்து அவரை மகிழ்விக்கலாம்? அவர் முகம் புன்முறுவலால் மலர்ந்திருக்கும் பொழுது என்னவெல்லாம் பேசி மகிழலாம்? அவர் முகம் கோபத்தால் சிவந்திருக்கும்பொழுது எந்த லளித வார்த்தைகளால் அவருடைய கோபத்தை அகற்றலாம்?—இம்மாதிரிப் பல்வேறு கேள்விகளும், அதற்கான பதில்களும் தோன்றி என் உள்ளத்தையே அவரிடம் கொள்ளை கொண்டு ஓடின!

அவ்வளவு ஆவலுடன் நான் எதிர்பார்த்த அந்த நாளும் வரத்தான் வந்தது. ஆனால் என்ன ஏமாற்றம்!

ஐந்து வருஷ காலம் வைத்தியக் கல்லூரியை முற்றுகையிட்டு எம். பி. பி. எஸ். என்னும் பட்டத்தைச் சுமந்து வெளிவந்த என் கணவர், மதுரையிலுள்ள அவர் மாமாவின் சொந்த 'டிஸ்பென்ஸரி'யிலேயே வேலைக்கு அமர்ந்தார்.

டாக்டர்களின் கடமை எத்தகையது என்பதை நான் உணராமலில்லை. ஆயினும் தம் மனைவியின் முகத்தை ஒரு நிமிஷமாவது நிமிர்ந்து பார்க்கக்கூடவா அவகாசம் கிடையாது!

என் கணவர் வேலை செய்யும் 'டிஸ்பென்ஸரி'யிலேயே ஒரு ஆராய்ச்சி அறையும் இருந்தது. 'டிஸ்பென்ஸரி' மூடியிருக்கும் நேரங்களில் அவர் அந்த ஆராய்ச்சி அறைக்குள் புகுந்துகொண்டு விடுவார். சாப்பிட உள்ளே வரும் அந்தக் கால் மணி அவகாசத்தைக் கூட வீணாக்காமல், கையில் ஒரு ஆராய்ச்சிப் புத்தகத்துடன்தான் வருவார்.

"குழம்பு போதுமா?"

"உம்......"

"வெண்டைக்காய் சாம்பார் வேண்டுமா, மிளகுக் குழம்பு வேண்டுமா?"

"உம்...உம் ......!"

எல்லாவற்றிற்கும் அவரிடமிருந்து வரும் பதில் இந்த 'உம்' ஒன்றுதான். நானும் என் சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்து அவருடைய திருஷ்டியைக் கவர முயன்றேன். எல்லாம் விழலுக்கிறைத்த நீராகவே முடிந்தன.

வைகையாற்றின் கரைமீதிருந்த அந்தப் பங்களாவில் எனக்கென்று பிரத்தியேகமாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. சமையலுக்கு ஆள்; சுற்று வேலைக்கு ஆள்; நான் கூப்பிட்டவுடன் ஓடி வர ஒரு ஆள்; இப்படி பல வேலைக்காரர்களின் மத்தியில் நான் ஒரு கொலுப் பொம்மையைப் போலவே இருந்தேன். இத்தனை வைபோகங்களுடன் வாழும் என்னைக் காட்டிலும் அந்தச் சிறுக் குடிசையில் வாழும் தோட்டக்கார வேலனின் மனைவி தேவானை எவ்வளவோ சந்தோஷமாக இருந்தாள்! தேவானையின் முக தரிசனத்திற்காக ஒரு நாள் முழுதும் வேண்டுமானாலும் பட்டினி கிடப்பானே, வேலன்!

நாட்களும் மெல்ல நகர்ந்தன. எங்கள் இல்வாழ்க்கையைப் பார்த்துப் போக வந்திருந்தார் என் மாமனார். இரண்டு தினங்களுக்குப் பின் அவர் ஊருக்குப் புறப்பட்டார். அன்று நான் மனதைத் திடம் செய்துகொண்டு அவர் இருந்த ஆராய்ச்சி

அறைக்குள் நுழைந்தேன். பூதக்கண்ணாடியின் மூலம் எதையோ மிகக் கூர்மையாக ஆராய்ந்து கொண்டிருந்தவருக்கு நான் வந்து நிற்பது எப்படித் தெரியும்?

நான் மெல்ல, "அப்பாவுடன் நானும் திருச்சிக்குப் போகட்டுமா?" என்றேன்.

அவர் திடுக்கிட்டு நிமிர்ந்து, "நீயா! என்ன சொன்னாய்? திருச்சிக்குப் போக வேண்டுமா?" என்று கேட்டு விட்டுச் சற்று மௌனமாக இருந்தார்.

பிறகு, "நீ அவசியம் போகவேண்டுமா?" என்று கேட்டார்.

"நான் இங்கே இருக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லாதபோது, நான் எங்கே போனால்தான் என்ன?"

"சரி, சரி! அப்பாவிடம் சொல்லி உன்னை அழைத்துப் போகச் சொல்கிறேன், போ!" என்றார் வெறுப்புடன்.

"வெளியே போ!" என்று சொல்லாமற் சொன்ன அவர் வார்த்தைகளால் என் மனம் துன்புற்றுத் துடித்தது. வாயிற்படி தாண்டியதும் ஏனோ மீண்டும் திரும்பிப் பார்த்தேன். அப்போதும் அவர் அந்தப் பாழாய்ப் போன பூதக் கண்ணாடியுடன் ஐக்கியமாகி யிருந்தார்!

2

திருச்சிக்கு வந்த பின் ஒருவாறு என் துன்பத்தை மறக்க முயன்றேன். என் கணவருக்குப் பின் ஆணும், பெண்ணுமாக ஏழு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுக்குச் சிசுருஷை செய்வதில் என் காலத்தைக் கழித்தேன். என் மாமியார், மாமனார் இருவருக்கும் என்னால் முடிந்தவரை பணிவிடைகள் செய்து ஒருவாறு மனச் சாந்தி பெற்றேன்.



அன்று "வாடாப்பா, மணி! நீ இன்று வருவதாக ஒரு வரி எழுதப்படாதோ?" என்ற கேள்வியுடன் என் மாமியார் தம் பிள்ளையை வரவேற்கவே, நான் திடுக்கிட்டு நிமிர்ந்தேன். கையில் தோல் பையுடன் உள்ளே வந்து கொண்டிருந்தார் என் கணவர்.

"அம்மா, ராஜம்! மணிக்குக் காப்பி போடு! என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார் என் மாமியார். நான் அவர் சொல்வதற்கு முன்னரே எல்லாம் தயார் செய்து விட்டேன். ஆனால் அதை நானே கொண்டுபோய்க் கொடுக்க இஷ்டப்படாமல் தயங்கி நின்ற சமயத்தில் என் மாமியார் வரவே டிபனை அவரிடமே கொடுத்து, "அடுப்பில் காரியமிருக்கு; இதை உங்கள் பிள்ளையிடம் கொடுத்து விடுங்கள்!" என்றேன்.

இரவு சாப்பாட்டின் போதும் இலை, மனை எல்லாம் தயாராக எடுத்துப் போட்டு விட்டு, "அம்மா! சற்று உங்கள் பிள்ளைக்குச் சாப்பாடு பரிமாறி விடுகிறீர்களா? நான் சந்திரனைத் தூங்கப் பண்ணிவிட்டு வந்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே, என் மைத்துனனைத் தூக்கித் தோளில் சாத்திக்

கொண்டு படுக்கை யறைக்குள் நுழைந்து விட்டேன்!

இம்மாதிரி அவருக்கு நான் செய்ய வேண்டிய சிசுருஷைகள் யாவையும் தந்திரமாகப் பிறர் மூலமாகவே நிறைவேற்றினேன். இரவு பாலையும் என் நாத்தனார் சியாமளியிடம் கொடுத்து அனுப்பி விட்டு, வழக்கம்போல் சியாமளியின் அறையிலேயே நானும் படுத்துக்கொண்டு விட்டேன்.

இதனையெல்லாம் அவராக என்னோடு பேச வருவார், அல்லது என்னைக் கூப்பிட்டனுப்புவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவ்விதம் செய்யக் கூடிய ஆசாமி அவர் அல்ல என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் என் அன்பையும் என்னையும் சற்றும் மதிக்காத அவரை நான் மட்டும் ஏன் மதிக்க வேண்டும்?

அன்று இரவு நான் சற்றும் எதிர்பாராத சம்பவம் நடந்தது. நடு இரவுக்குப் பின் மாடிப்படிகளில் யாரோ இறங்கி வரும் சந்தம் கேட்டது.

"சியாமளி!"

ஆம்; அவர்தான்!

"சியாமளியை எழுப்பி அனுப்புவதா? அல்லது நாமே போவதா!" என்ற போராட்டம் என் மனதில் எழுந்தது. அதற்குள் சியாமளியே விழித்துக் கொண்டு விட்டாள்.

"என் அண்ணா!"

"கொஞ்சம் தீர்த்தம் கொடு!"

"உன் அறையில் நான் தீர்த்தம் வைத்திருந்தேனே!"

"வைத்திருந்தாயா? நான் கவனிக்கவில்லையே!"

"சரி, இதோ தருகிறேன்!" என்று சொல்லி, சியாமளி அவருக்குத் தீர்த்தம் எடுத்துக் கொடுத்தாள்.

அவர் அதைச் சாப்பிட்டுவிட்டு, "சியாமளி! உன் மன்னி எங்கே? தூங்கி விட்டாளா?" என்று கேட்டார்.


"ஆமாம், அண்ணா! ஏன், அவளை எழுப்பட்டுமா?" என்று கேட்டாள் சியாமளி.

சிறிது நேரம் அவர் எதுவும் பேசவில்லை. பிறகு, "வேண்டாம்; அவளை எழுப்ப வேண்டாம்!" என்றார்.

அடுத்த நிமிஷம் அவர் மாடிப் படிகளில் ஏறிச் சென்ற சத்தம் என் காதில் விழுந்தது. அதைக் கேட்ட எனக்கு இருதய ஓட்டமே நின்றுவிட்ட மாதிரி இருந்தது. கிடைத்த கண்களை மீண்டும் இழந்து நிற்கும் குருடனைப்போல் உள்ளக் குமுறலை அடக்க முடியாமல் நான் விம்மினேன்.

மறுதினம் மாலையே அவர் ஊருக்குப் புறப்பட்டு விட்டார்! தாம் ஒரு முக்கிய காரியமாக மதனப்பள்ளிக்குச் செல்வதாகவும், வர இரண்டு மாதங்களாவது ஆகுமென்றும், அதுவரை சௌக்கியத்திற்கு மதனப்பள்ளிக்கே எழுதுமாறும் அம்மாவிடம் சொல்லிவிட்டுக் குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகச் சொல்லிக்கொண்டு அவர் புறப்பட்டார். நான் ஒருத்தி அங்கு இருக்கிறேன் என்ற எண்ணமே தமக்கு இருப்பதாக அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை!

உயிருடன் சமாதி செய்யப்பட்டவளது உள்ளம்போல் என் உள்ளம் துடித்தது. என்மீது ஏற்பட்ட கோபத்தால் அவர் அவ்விதம் செய்தாரா? தாம்பத்ய வாழ்வின் இன்பத்திற்கே உலை வைப்பது அற்பமான சிறு தவறுகள்தான் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. அம்மாதிரி என் சிறு தவறு



என் வாழ்வின் இன்பத்திற்கே முற்றுப் புள்ளி வைத்து விடுமோ? ஆனால் அவர் செய்தது மட்டும் தவறு இல்லையா? தம்மை நம்பி — தம் வாழ்வில் பங்கு கொள்ள வந்த ஒரு இளம் பெண்ணின் மனதைத் தாம் புண் பண்ணி விட்டோமே!' என்ற அங்கலாய்ப்பு அவருக்கு மட்டும் உண்டாகாமலே போய் விடுமா? ஆனாலும் இது கொடுமை!— கொடிக்கு ஆதாரமான கொம்பு முரடாகவும், முட்கள் நிரம்பியதாகவும் இருக்கலாம். ஆனாலும் துன்புற்றுத் தவிக்கும் கொடிக்கு ஆதாரம் அக்கொம்பு ஒன்று தானே? ஆனால், அக் கொம்பிற்கோ? கொடி சிறிது நழுவினாலும் அதை உதறி விட்டுப் பல்வேறு கொடிகளைத் தழுவி மகிழ உரிமையுண்டு!— இதை நினைத்தபொழுது என் உடல் நடுங்கிற்று.

கவலையால் என் உடல் நாளுக்கு நாள் இளைக்கத் தொடங்கிற்று. என்னுடைய நிலையைக் கண்டு கவலை கொண்ட என் மாமியார், கொஞ்ச நாட்கள் பிறந்தகத்தில் இருந்து வருமாறு என்னை அனுப்பினார்.

எமன்போல் என்னை வருத்திய அந்த நாட்களும் மெல்லப் போய்க் கொண்டு தான் இருந்தன. ஒரு நாள், "அக்கா, அக்கா! இதோ பார், அத்திம்பேர் போட்டோ!" என்று கூச்சல் போட்டுக் கொண்டே, கையில் பிடித்த தினசரிப் பத்திரிகையுடன் ஓடி வந்தான் என் தம்பி ரமணி. அந்தப் பத்திரிகையில் நாலு டாக்டர்களுக்கு மத்தியில் என் கணவரது படமும் இருந்தது. "இந்த டாக்டர்கள் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக 'எலும்புருக்கி' என்னும் தீராத வியாதியைத் தீர்ப்பதற்கான சிகிச்சா மார்க்கத்தைக் கண்டு பிடித்து விட்டனர்!" என்று கொட்டை எழுத்தில் அந்தப் படத்தின் கீழே விவரமும் கொடுக்கப்பட்டிருந்தது.

இதைப் பார்த்து வீட்டில் எல்லோரும் கொண்ட ஆனந்தம் கொஞ்சமல்ல. ஆனால், என் வாழ்வின் இன்பத்திற்கே சத்துருவாக நிற்கும் அந்த 'ஆராய்ச்சி' என்ற வார்த்தையைக் கேட்கவே பிடிக்காமல் என் உள்ளம் குமுறியது. தீராத வியாதியைத் தீர்க்கும் மருந்தைக் கண்டு பிடித்த அந்த மேதாவிக்கு, ஏனோ என் வியாதியைத் தீர்க்கும் மார்க்கம் மட்டும் இன்னும் தென்படவில்லை!

3

வழக்கத்தை அனுசரித்து என் தந்தை என்னுடைய புக்ககத்திற்கு, 'தீபாவளிக்கு மாப்பிள்ளையுடன் யாவரும் வருமாறு அழைப்பு அனுப்பினார். சீக்கிரமே என் மாமனாரிடமிருந்து பதிலும் கிடைத்தது. ஆராய்ச்சி முடிந்து மதனப்பள்ளியிலிருந்து திரும்பி வரப்போகும் தம் பிள்ளையை மட்டும் தீபாவளிக்கு அனுப்பி வைப்பதாக அவர் எழுதியிருந்தார். எனக்கு இதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. வீண் சபலம் என்று எண்ணினேன்.

தீபாவளிக்கு முதல் நாள் காலை வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து கேட்ட ரமணியின் கூச்சலும் என்னைத் திகைப்படையச் செய்தன. என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. எழுந்து ஜன்னல் மூலம் வெளிப்புறம் நோக்கினேன். என்ன விந்தை! வண்டியினின்றும் இறங்கியது என் கணவரேதான்!

அவரைக் கண்டதும் என் உள்ளத்தில் பலவிதக் குழப்பங்கள்! தாய் தந்தையரின் சொல்லைத் தட்டமுடியாமல் 'விசிட்' என்று வந்திருப்பாரோ! இல்லை, உண்மையாகவே என்மீது அன்பு பிறந்துவிட்டதோ! எது எப்படியிருந்தாலும் இன்று என் இருப்பிடம் தேடி அவரே வந்துள்ளார். 'பெண்களின் விலைமதிப்பற்ற அன்பை நினைத்த பொழுது சுலபமாகப் பெற்றுவிட முடியாது!' என்பதை அவர் உணரும்படிச் செய்யவேண்டும் என்று நான் என் மனத்திற்குள் கருவிக் கொண்டேன்.

அன்று அவரை எதிர்கொண்டழைக்கவோ காப்பி, டிபன் கொடுக்கவோ நான் முன்வரவில்லை. தலைவலி என்ற சாக்கில் என் அறையை விட்டே வெளியே வராமல் இருந்து விட்டேன்.

அம்மா, அப்பாவுக்கோ தலைகால் புரியவில்லை. மகத்தான புகழ்பெற்ற மாப்பிள்ளையல்லவா வந்திருக்கிறார்! அப்பா அவரை ராஜோபசாரம் செய்து அழைத்துப் போய் மாடி ஹாலில் உட்காரவைத்து ஒரே புகழ் மாலையாகப் போட்டு அவரைத் திணற அடித்துக் கொண்டிருந்தார்.

அம்மாவுக்கோ ஒன்றுமே புரியவில்லை. வெந்நீர் அடுப்பில் வெண்கலப் பானையை வைத்து ஜலம் கொட்டுகிறாள்! சொஜ்ஜிக்குப் போடவேண்டிய ஏலப் பொடியைப் பஜ்ஜியில் தூவுகிறாள்! இப்படியாக வீடு அல்லோல கல்லோலப் பட்டது!

அடக்க முடியாத ஆவலால் தூண்டப்பட்டு, நான் மத்தியானச் சாப்பாட்டின் போது மெல்ல அவர் அறியா வண்ணம்

கதவிடுக்கில் எட்டிப் பார்த்தேன். என்ன விந்தை! குனிந்த தலையை நிமிராமலே சாப்பிடும் வழக்கமுடையவர், அன்று தம் கண்களை நாலாபுறமும் சுழற்றிச் சுழற்றி இழந்து விட்ட எதையோ தேடும் ஆராய்ச்சியில் முனைந்திருந்தார்!

வெற்றியின் அருணோதயம் கண்டு சற்றே விம்மிதம் கொண்டது என் உள்ளம்.

அன்று மாலை நாலு மணி சுமாருக்கு, ரமணி கையில் பிரித்த ஒரு புடவையுடன் என் அறைக்குள் ஓடி வந்தான்.

“அக்கா! அத்திம்பேர் இதை உன்னிடம் காட்டச் சொன்னார். மதனப் பள்ளியிலிருந்து வாங்கி வந்தாராம்!” என்றான் மூச்சு விடாமல்.

விந்தையிலும் விந்தை! எனக்கென்று புடவைகூட வாங்கி வந்தாரா! அட, ஜாக்கெட் கூடவா! என்ன அழகான கலர்! என்ன அற்புதமான சரிகை வேலைப்பாடமைந்த பார்டர்! பொருத்தமான கலரும், அளவான ஜாக்கெட்டும் வாங்கி யிருக்கும் அவர், அவற்றை வாங்கும்போது நிச்சயமாக என் உருவைச் சிந்தனை செய்தே யிருப்பார்!

“சரி, புடவையைக் கொண்டு போய்ப் பத்திரமாக அத்திம்பேரிடம் கொடுத்து விடு, போ! போ!” என்றேன் சற்றுக் கடுமையாகவே.

ரமணியின் முகம் சுண்டி விட்டது. மேலே ஒன்றும் கேட்காமல் புடவையை மடித்துக் கொண்டு போய் விட்டான்.

மேலே சென்ற ரமணி சீக்கிரமே திரும்பி வந்தான். அவன் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பி யிருந்தது. அவன் என் பக்கம் பாராமலே மூச்சுத் திணற அம்மாவிடம் சொன்னான் :—

“அம்மா! அத்திம்பேர் வண்டி கொண்டு வரச் சொல்லுகிறார்! மாலை ஐந்தரை மணி வண்டிக்கே அவர் ஊருக்குப் போக வேண்டுமாம்!”

அம்மா கையிலிருந்த சட்டுவத்தைப் பொத்தென்று கீழே போட்டாள். “இந்த அசட்டுப் பெண்ணோடு நான் என்ன செய்வேன்? வந்த புருஷனை என்னவென்று கூட விசாரிக்காமல் இப்படி அடம் பிடிக்கிறதே? அவருக்கு ஏன் கோபம் வராது?” என்று சொல்லிக்கொண்டே தன் தலையில் அடித்துக் கொண்டாள்.

“இதோ பார், ரமணி! உன் அத்திம்பேரிடம் போய்ச் சொல்லு: எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு புறப்பட அக்காவுக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டுமாதலால், ஆறரை மணி வண்டியில் புறப்பட்டு விடலாம் என்று நான் சொன்னதாகப் போய்ச் சொல்லு!” என்று சொல்லி ரமணியை அனுப்பி விட்டுப் பின்னோடு நானும் சென்றேன்.

பெட்டியில் எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்து வைத்துக் கொண்டிருந்தவர், ரமணியின் வார்த்தைகளைக் கேட்டுத் திரும்பினார்.

“என்ன! அப்படியானால் உன் அக்காவும் என்னோடு வரப்போகிறாளா?” என்றார் மிக்க வியப்புடன்.

“ஆமாம்! ஏன், நான் வருவதால் உங்கள் ஆராய்ச்சிக்கு ரொம்பவும் இடைஞ்சலாக இருக்குமோ?” என்ற சூடான கேள்வியுடன் நான் அவருக்கு முன்னால் போய் நின்றேன்.

வியப்பினால் விரிந்த தம் அழகிய விழிகளால் அவர் என் உச்சி முதல் உள்ளங்கால் வரை கூர்ந்து நோக்கினார். கோபத்தால் நிமிர்ந்து நின்ற என் சிரம் நாணத்தால் கவிழ்ந்தது.

“மணி ஆறு! வண்டி கொண்டு வரட்டுமா, அத்திம்பேரே!” என்று கீழிருந்து கத்தினான் ரமணி.

“அட, முட்டாள்! இப்போது யார் உன்னை வண்டி கொண்டுவரச் சொன்னது?” என்று மாடியில் இருந்தபடியே பதிலுக்குக் கத்தினார் இவர்!


கடினமான
பாதையானாலும்...
டன்லப்
ஜயண்ட்ஸ்
சமாளித்துவிடும்
DUNLOP
★ ஏனெனில் ஒவ்வொரு டயரும் மிக உறுதியுள்ள
"ட்யூராகார்டை"
கொண்டு செய்யப்பட்டிருக்கிறது.



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

நந்தராம் திடீரென்று தன் சிந்தனையிலிருந்து கலைந்து, "உங்கள் கால் சரியாகி விட்டதல்லவா?" என்று கேட்டான்.

"ஏன், சரியாகி விட்டதே!" என்றார் ராமநாத பாபு

நந்தராம் மேலே ஏதோ சொல்ல வாய் எடுத்தவன் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டான். இதைக் கவனித்த ராமநாத பாபு, 'தானும் ஜஸ்லோவும் பேசியதை இவன் கேட்டுவிட்டான்; அதனால்தான் இப்படிப் பேசுகிறான்!' என்று எண்ணி, "என் கால்தான் சரியாகி விட்டதே! நாளைக்கே அலகாபாத் போகலாம் என்றிருக்கிறேன்" என்றார்.

"புதுவாகூட இனி பயமில்லை என்று சொல்லிவிட்டான். நீங்கள் நாளைக்கே போய்விடலாம்!" என்றான் நந்தராம்.

எப்பொழுதும் இனிமையாகவும் மரியாதையாகவும் பேசுகிற நந்தராம் இப்படிப் பேசியது ராமநாத பாபுவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆகையால் அவர் மேலே ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டார்.

இரவு படுக்கைக்குப் போன நந்தராமின் உள்ளத்தில் கிளர்ச்சி மூண்டது. ராமநாத பாபுவும் யசோதராவும் பேசியதை அவன் ஆதியோடு அந்தமாகக் கேட்டிருந்தான்.

அவன் படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் சிந்திக்கலானான்:

இனி என் வாழ்க்கை அமைதியுடன் கழியும் என்றல்லவா எண்ணியிருந்தேன்! ஆனால் உண்மையில் இனித்தானே நான் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தொடங்கப் போகிறது! கடவுளே! உனக்கு இன்னுமா திருப்தி ஏற்படவில்லை? என்னுடைய உள்ளத்து ஒளியான லோனாவைப் பிடுங்கிக் கொண்டு விட்டாய். என்னைப் பிச்சைக்காரனாக்கித் தெருத் தெருவாக அலையவிட்டாய். இவ்வளவு செய்த பிறகும் கூடவா உனக்கு என்மீது இரக்கம் வரவில்லை? நான் செய்த பாவம் அவ்வளவு பெரியதா, என்ன? இன்னும் அதன் பிராயச்சித்தம் முடிந்தபாடில்லையா?

இப்படி எண்ணும்பொழுதே அவனது கண்களில் நீர் சுரந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தனக்குத்தானே கூறிக் கொள்ளலானான்:

எங்கள் காதல் காரணமாக லோனாவின் தந்தை அனுபவித்தாரே, அதுபோன்ற கஷ்டங்களை நானும் ஜஸ்லோவின் காரணமாக அனுபவிக்க வேண்டும்போல் அல்லவா தோன்றுகிறது! ஆனால் அப்படியெல்லாம் விஷயத்தை முற்றவிடக் கூடாது. என் விஷயமும் லோனாவின் விஷயமும் வேறு. நாங்கள் இருவரும் ஒரே சாதிக்காரர்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள், விளையாடினவர்கள். நான் அவளைக் காதலிக்கவோ, மணம் புரிந்து கொள்ளவோ எனக்கு உரிமை இருந்தது. ஆனால் இந்த 'கத்ரி' சாதிப் பையனுக்கு அந்த உரிமை ஏது? இது வீண் ஆசை, தப்பான முயற்சி! நான் இதை எதிர்த்தே தீருவேன். இவன் நல்ல எண்ணத்துடனும் உதார குணத்

துடனும்தான் உபசாரம் செய்தான் என்று எண்ணி ஏமாந்தே போனேனே! இப்பொழு தல்லவா புரிகிறது, இவனுடைய கெட்ட எண்ணங்கள் எல்லாம். எனக்கு இது முன்னமேயே தெரிந்திருந்தால் பட்டினி கிடந்துகூட மரித்திருப்பேன்; இந்த நீசன் வீட்டில் தஞ்சம் புகுந்தே இருக்கமாட்டேன். எவ்வளவு நாட்களாக இவனும் ஜஸ்லோவும் இப்படி....சே! ராமகாந்த பாபு அவ்வளவு மோசமாக நடந்து கொள்வாரா? ஜஸ்லோவும் ரொம்ப நல்லவள் ஆயிற்றே! தவறான வழியில் இருவரும் போய் இருக்கவே மாட்டார்கள். ஆனால் உண்மையை எப்படித் தெரிந்து கொள்வது?—என் மூளை குழம்புகிறதே! கடவுளே! இப்படி என்னைச் சோதிக்காதே; என் என்னிடம் இவ்வளவு கோபம்? இன்னுமா சோதனை? மன்னித்து விடு, ஈசா!" என்று முணு முணுத்தவாறு கர்தாராம் அழலானான்.

அதே சமயம் அறைக்குள் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு சரியாக உட்கார்ந்து கொண்டான் கர்தாராம். கையில் பாலுடன் உள்ளே நுழைந்த யசோதாரா, "இன்னும் தூங்கவில்லையா, அப்பா?" என்று கேட்டாள்.

கர்தாராம் யசோதாராவைப் பரீக்ஷிக்க எண்ணி, "இல்லே, அம்மா! நாளைக்கு ராமகாந்த பாபு ஊருக்குப் போகப் போகிறாரே, உனக்குத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு அவளுடைய முகபாவத்தைக் கவனிக்கலானான்.

"நாளைக்கேயா? ஏன் இவ்வளவு சீக்கிரம்?" என்று பரபரப்புடனும் வருத்தத்துடனும் விசாரித்தாள் யசோதாரா.

"கால் சரியாகி விட்டது. இனிமேல் அவருக்கு இங்கே என்ன வேலை?"

யசோதாரா இதற்கு ஒன்றும் பதில் அளிக்காமல் போய் விட்டாள். கர்தாராம் பல்லைக் கடித்துக் கொண்டு, "இவளுக்கு ஏன் இவ்வளவு அக்கறை! ஏதோ விஷயமிருக்கிறது இல்லாவிட்டால் ...... சரி, போகப் போகப் பார்ப்போம்!" என்று மனத்துள் எண்ணிக் கொண்டு தூங்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

* * *

மறுநாள் காலையில் ஜமீன்தார், ஜமீன்தாரிணி முதலியவர்கள் இரண்டு நாட்கள் கழித்துப் போகுமாறு எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் பிடிவாதமாக விடை பெற்றுக்கொண்டு ஸ்டேஷனுக்குப் புறப்



புட்டு விட்டார் ராமநாத பாபு. அவரை வண்டி ஏற்றி விடுவதற்காக சுந்தராமும் அவருடன் சென்றான்.

சுந்தராமிடம் ஏற்பட்டிருந்த மன மாறுதலை நன்கு உணர்ந்திருந்த ராமநாத பாபு, அவனுடைய உள்ளத்தில் ஏதாவது தப்பெண்ணம் உதித்திருந்தால் அதை அகற்றிவிடவேண்டுமென எண்ணி, "சுந்து, நேற்று முதல் நீ ஒருமாதிரியாக இருக்கிறாயே, ஏன்?" என்று கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லையே!" என்றான் சுந்தராம்.

"என்னிடம் ஒளிக்காதே, சுந்து! நேற்று முதல் நீ என்னிடம் ஒருவிதமாக நடந்து கொள்கிறாய். இதுவரை நீ இப்படி நடந்து கொண்டதே இல்லை. என்னிடம் ஏதாவது குற்றம் தென்பட்டால் ஒளிக்காமல் சொல்லு!" என்றார் ராமநாத பாபு.

சுந்தராம் யோசனையில் ஆழ்ந்தான். ஜஸ்லோவையும் ராமநாத பாபுவையும் பற்றிய சகல விஷயங்களையும் அவன் தெரிந்துகொண்டு விட வேண்டுமென விரும்பினான். ஆனால் அதைப் பற்றி ராமநாத பாபுவிடமே கேட்க அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. ராமநாதபாபு எவ்வித சங்கோசமுமின்றிச் சொன்ன வார்த்தைகள், அவரைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் கொள்ள இடம் கொடுக்கவே இல்லை. அவன் என்ன சொல்வது என்று புரியாமல் தயங்கினான். அவனுடைய நிலைமையைக் கண்ட ராமநாதபாபு, "இதோ பார், சுந்தராம்! மனதில் உள்ளதை நல்லதோ கெட்டதோ, தெளிவாகச் சொல்லிச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதுதான் நல்லது. நீ என்மீது தப்பபிப்பிராயம் கொண்டிருந்தால் அதைப் போக்குவது என் கடமை. நான் எதையும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன். என்னை நம்பி உன் மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லு!" என்றார்.

ராமநாத பாபுவின் வார்த்தைகளைக் கேட்ட சுந்தராமின் உள்ளம் உருகி விட்டது. அவன் ராமநாத பாபுவின் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, "எசமான், நான் உங்களிடம் ஒன்றையும் ஒளிக்க மாட்டேன். எல்லாவற்றையும் ஒளிக்காமல் என்றைக்காவது ஒரு நாள் கட்டாயம் சொல்கிறேன்" என்றான்.

"இல்லை; இன்றைக்கே, இப்பொழுதே சொல். உனக்குச் சங்கோசமாயிருந்தால் வண்டியிலிருந்து இறங்கி விடு. பேசிக்கொண்டே நாம் இருவரும் ஸ்டேஷனுக்கு நடந்தே போவோம்" என்று கூறி ராமநாத பாபு அவனுடைய பதிலை எதிர்பார்க்காமலே வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கி விட்டார். சுந்தராமும் அவருக்குப் பின்னால் இறங்கியவாறே, "வண்டிக்கு நேரமாய் விடப் போகிறதே!" என்றான்.

"அதெல்லாம் வேண்டிய நேரமிருக்கிறது. நீ கவலைப்படாதே, வா! அந்த மாந்தோப்பில் போய்த் தனிமையில் பேசுவோம்" என்று கூறி ராமநாதபாபு சுந்தராமை மாந்தோப்புக்குள் அழைத்துச் சென்றார். ஒரு மரத்தடியில் இருவரும் உட்கார்ந்தனர்.

"நீங்களும் ஜஸ்லோவும் தனிமையில் பேசிக்கொண்டிருந்ததை நேற்றுக் கேட்டேன். அது முதல்......" என்று ஆரம்பித்தான் சுந்தராம்.

ராமநாதபாபு அவனை இடைமறித்து, "இதுதான் காரணமாயிருக்கும் என்று நான் அப்பொழுதே நினைத்தேன். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மனமாரக் காதலிக்கிறோம் என்பது உண்மையே. ஆனால் இன்றுவரை நெருங்கிப் பழகிய எங்களுடைய நடத்தையில் எதுவும் குற்றம் கற்பிக்க முடியாது என்று நான் உறுதி கூறுகிறேன். நீ நம்பினால் நம்பு; நம்பாவிட்டால் போ! உண்மையைச் சொல்லி விட்டேன்" என்றார்.

இதைக் கேட்ட சுந்தராம் தழுதழுத்த குரலில், "உங்களிடம் அகாரணமாக என்னுள்ளத்தில் அவநம்பிக்கை ஏற்பட்டதற்கு வருந்துகிறேன். நீங்கள் எதற்காகப் பொய் சொல்லப் போகிறீர்கள்? உங்களைப் பற்றி என்னென்னவோ கெட்ட அபிப்பிராயம் கொண்டேனே, நான் மகா பாவி! என்னை மன்னித்தருளுங்கள்!" என்று வேண்டிக் கொண்டான்.

"சுந்தராம், மன்னிப்பு எதற்கு? இந்த மாதிரி நிலைமையில் நீ எண்ணியதைப் போலவேதான் யாருமே எண்ணுவார்கள். இது சகஜம். உன்மீது குற்றமே இல்லை. ஒன்றையும் ஒளிக்காமல் பகிரங்கமாகச் சொன்னாயே, அதுவரையில் எனக்குச் சந்தோஷம். சரி, ஸ்டேஷனுக்குப் புறப்படுவோமா?" என்று கேட்டவாறே ராமநாத பாபு எழுந்து வண்டியை நோக்கி மௌனமாக நடந்தார். சுந்தராமும் கவலை தோய்ந்த முகத்துடன் அவர் பின்னாலேயே சென்று வண்டியில் ஏறிக்கொண்டான்.

வண்டி புறப்பட்டது. சுந்தராமின் முகத்தில் கவலை சூழ்ந்திருப்பதைக் கண்ட ராமநாதபாபு, "சுந்தராம், என் முகம் வாட்டமா யிருக்கிறது?" என்று கேட்டார்.

சுந்தராம் ஒரு பெருமூச்சு விட்டு, "எசமான், இந்த உலகத்தில் எனக்குச் சுகமே கிட்டாது என்று தோன்றுகிறது. எனக்குப் பிறந்தது முதல் ஒரு கணமும் நிம்மதியே கிடையாது. வீட்டுக்கு வந்த பின்பாவது நிம்மதி ஏற்படும் என்று நினைத்தேன். ஆனால் நிம்மதி கிட்டியபாடில்லை. கவலைதான் அதிகரித்திருக்கிறது!" என்றான்.

"ஏன்?"

"ஏன் என்றா கேட்கிறீர்கள்? நான் உயிருக்கு உயிராய் வளர்த்த பெண் மனநிம்மதி இழந்து கவலையால் வாடும்பொழுது எனக்கு எப்படி நிம்மதி கிட்டும்?"

சுந்தராமின் வார்த்தைகளின் கருத்தை உணர்ந்த ராமநாதபாபு, "நீ என்ன செய்ய முடியும், அப்பா?" என்றார்.

"அதனால்தான் எனக்கு நிம்மதியே கிடையாது என்கிறேன்" என்று கூறினான் சுந்தராம்.

அதற்குள் வண்டி ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தது. ராமநாதபாபு டிக்கட் வாங்கிக் கொண்டு சுந்தராமுடன் பிளாட்பாரத்தை அடைந்தார். ரயிலும் வந்து நின்றது. ராமநாதபாபு ரயிலில் ஏறி உட்கார்ந்த பின்னர், "போய் வருகிறேன், சுந்து! என்னைப் பற்றி உனக்கு வித்தியாசமான எண்ணம் ஒன்றுமில்லையே!" என்று கேட்டார்.

"நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்கள் மீது என்ன குற்றம்? எல்லாம் என் விதி விளைத்த வினைதான். என்னை மறந்து விடாதீர்கள். நான் ஏதாவது குற்றங் குறைகள் செய்திருந்தாலும் மன்னித்து முன் போலவே என்னிடம் அன்பாக இருங்கள். என் உயிர் போனாலும் சரி, ஜன்னோவுக்குச் சுகம் தரும் விஷயத்தில் எவ்விதமான குறையும் வைக்கமாட்டேன். இது மட்டும் நிச்சயம். சரி, போய் வாருங்கள். ஞாபகமிருக்கட்டும்" என்று கூறி சுந்தராம் விடை பெற்றுக் கொண்டான். ராமநாத பாபுவும் கண்களில் நீர் ததும்ப அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

21

கிறிஸ்துமஸ் விடுமுறைக்குத் தமது சொந்த ஊராகிய கான்பூருக்குச் சென்ற ராமநாதபாபுவுக்குத் தம்முடைய கல்யாண விஷயமாகப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்ற விஷயம் சம்பாவதியின் மூலமாகத் தெரிய வந்தது.

புத்தி வரவில்லை!



கணவன் :—நேற்று 'கிருஷ்ணன் தூது' நாடகம் பார்த்துவிட்டு வந்தாயே எப்படி இருந்தது?
மனைவி :—அதுவா! நான் குழந்தையா யிருந்தபோது ஒருதரம் பார்த்திருக்கிறேன். அந்தக் கட்டேலேபோற துரியோதனன் அப்படியேதான் இருக்கிறான். இவ்வளவு நாளாகியும் கொஞ்சங்கூட அவனுக்குப் புத்தி வந்தபாடில்லை!

அன்று சாப்பிடும் பொழுது அவருடைய தந்தை, "ராமு, உனக்குக் கல்யாணம் செய்துவிடலாம் என்று எண்ணிக் காசியில் உள்ள ஜகதீசப் பிரஸாத் என்பவருடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறேன். பெண் அழகா யிருப்பாளாம். நன்றாகப் படித்தும் இருக்கிறாளாம்!" என்றார்.

"அதற்கு இப்பொழுது என்ன அவசரம், அப்பா? படிப்பு முடிந்த பின்னால் செய்து கொண்டால் போகிறது!' என்றார் ராமநாத பாபு.

"படிப்புக்கும் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்? அதெல்லாம் நீ 'பாஸ்' செய்துவிடுவாய்!"

"இப்பொழுதே கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை."

"உன் இஷ்டம் என்ன? வருகிறவர்கள் எல்லாம் 'பையனுக்கு இந்த வருஷம் கல்யாணம் செய்யவில்லையா?' என்று கேட்கிறார்கள். இந்த வருஷம் செய்துவிட வேண்டும் என்று நான் தீர்மானித்து விட்டேன். எல்லாம் காலாகாலத்தில் ஆக வேண்டும் அல்லவா?" என்றார்.

ராமநாத பாபுவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. மறுநாள் தம் தகப்பனாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு லக்னௌவிலிருக்கும் விஜயகிஷோரைப் பார்க்கப் புறப்பட்டார்.

* * *

“ராமநாத், அபூர்வமாயிருக்கிறதே! என்ன விசேஷம்? வா! வீட்டைவிட்டு ஓடி வந்து விட்டாயா, என்ன!” என்று புன்முறுவலுடன் கேட்டவாறு ராமநாதபாபுவை வரவேற்றார் விஜயகிஷோர்.

ராமநாதபாபு சிரித்துக் கொண்டே, “இன்னும் உன் பரிகாசம் போன பாட்டைக் காணுமே!......அதிருக்கட்டும். உன்னை ஒன்று கேட்க வந்தேன்” என்று ஆரம்பித்தார்.

“என்ன?”

“அப்பா எனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறார்......”

“பேஷ்! தேதி வைத்தாகி விட்டதா?”

“அதெல்லாம் இல்லையப்பா! நான் ஜுல்ஸோவைக் காதலிக்கிறேன் என்பது தான் உனக்குத் தெரியுமே! நான் அவளைத்தான்......”

“நடக்காத காரியத்தைப் பற்றிப் பேசி என்ன பயன்? சாதி விட்டுச் சாதி கல்யாணம் செய்ய உங்கள் குடும்பத்திலும் சரி, அவளுடைய குடும்பத்திலும் சரி, ஒருவருமே சம்மதிக்க மாட்டார்கள். அப்படி இருக்கும்பொழுது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல ஆசைப்பட்டு என்ன பிரயோஜனம்? பேசாமல் உன் அப்பா பார்த்திருக்கும் பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டுவிடு. அது தான் நல்லது!” என்றார் விஜயகிஷோர்.

“விஷயம் தெரியாமல் பேசுகிறாயே! ஜுல்ஸோ என்னைக் கல்யாணம் செய்து கொள்வதை நந்துகூட விரும்புவான்போலிருக்கிறது!”

“நந்து விரும்பினால் மட்டும் ஆகிவிடுமா? அவன் அப்பா அம்மா உயிருடன் இருக்கிற வரையில் இது நடக்காத காரியம்!”

“ஏதோ உன்னை ஆலோசனை கேட்போம் என்று வந்தால் இப்படிப் பேசுகிறாயே! என்ன, போ!” என்று அலுத்துக் கொண்டார் ராமநாத பாபு.

“நான் வேறு என்ன சொல்வது? நந்துவைப் போல ஜுல்ஸோவை இழுத்துக் கொண்டு ஓடிப்போய் வாழ உனக்கு அவ்வளவு தைரியம் கிடையாது. தைரியமிருந்து அழைத்துக்கொண்டு நீ வந்துவிட்டால் என்னாலான உதவியைச் செய்ய நான் என்றும் சித்தமாயிருக்கிறேன்!” என்றார் விஜயகிஷோர்.

“அது கிடக்கட்டும், அப்பா! ஒன்று செய்தால் என்ன? நந்துவின் சம்மதத்தைச் சரியாய்த் தெரிந்துகொண்டு, வேறு யாருக்குமே தெரியாமல் ரகசியமாகக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டால் அப்புறம் யார் என்ன சொல்லக் கிடக்கிறது?”

“திருட்டுத் தாலி கட்டிவிடலாம் என்று நினைக்கிறாயா? அதற்கு அவள் சம்மதிக்க வேண்டாமா? அப்படி அவள் சம்மதித்தாலும் அது தெரிந்த பிறகு வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டி வருமே! எல்லாவற்றையும் இப்பொழுதே யோசித்துக் கொள்!”

“நான் எதற்கும் தயார்!”

“அட, அவ்வளவு துணிச்சல் உனக்கு வந்து விட்டதா!”

“அதிருக்கட்டும், அப்பா! நான் சொல்வதைக் கேள். நீ எனக்காக நந்தாவிடம் போய்க் கேட்டுப் பார், என்ன?”

“என்னையா சொல்கிறாய்? அதையெல்லாம் என் தலையில் கட்டாதே! அதற்கு வேறு யாராவது பார்!”

“என்ன, விஜயகிஷோர்! உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? நீ போய்த்தான் ஆகவேண்டும்.”

“எனக்கு இதெல்லாம் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இருந்தாலும் உனக்காகப் போய் வருகிறேன். ஆமாம், என்றைக்குப் போவது?”

“என்றைக்கு உனக்குச் சௌகரியமோ, அன்றைக்குப்போ! இதெல்லாம் கொஞ்சம் சீக்கிரம் தெரிந்தால் நல்லது. எல்லாம் ரகசியமாயிருக்க வேண்டும். தெரிந்ததா?”

“அதுகூட எனக்குத் தெரியாதா? ஆனால் எந்தச் சாக்கை வைத்துக்கொண்டு அங்கே போவது?”

“வேட்டையாடப் போகிறவன் போல் போய்ச் சேரு! அதுதான் நல்லது. நான் வேண்டுமானால் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன்.”

“சரி, நீ ஒரு கடிதம் எழுதிக் கொடு. நாளைக்கே நான் போய் வந்துவிடுகிறேன்!” என்று கூறி எழுந்தார் விஜயகிஷோர்.

(தொடரும்)

இரு கடிதங்கள்

சி.ரா.

என் தங்கை மைதிலியையும், உமா மகேசுவரனையும் தனிக் குடித்தனம் வைத்துச் சுமார் ஒரு வருடமாகப் போகிறது. சென்ற தீபாவளியன்று பழைய தகராறுகள் தீர்ந்து உமா மைதிலியை அழைத்துக் கொண்டு போனான்.

அதன் பிறகு அடிக்கடி அவர்களிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. அந்நியோன்னியமாகவும், சௌக்கியமாகவும் இருப்பதாகவே கடிதங்கள் தெரிவித்தன.

இந்தத் தீபாவளிக்கு அவர்களை வரவழைத்து ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில், என் பெயருக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. விலாசத்திலிருந்த கையெழுத்து எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. மைதிலியும், உமாவும் தனித் தனியே கடிதம் எழுதியிருந்தார்கள்!

விஷயம் ஏதோ இருக்க வேண்டுமென்று அவற்றை அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன். நான் நினைத்தபடியே அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டிருந்தது. மைதிலி, "என்னை உடனே அழைத்துச் சென்று விடு!" என்று எழுதியிருந்தாள். உமா, "உன் தங்கையை உடனே அழைத்துப் போ!" என்று கோடிட்டு எழுதியிருந்தான்.

"இது என்ன விபரீதம்!" என்று எண்ணியவாறு, கடிதங்களை மற்றுமொரு முறை படித்தேன்.

மைதிலி எழுதியிருந்தாள்:

"அண்ணா

இவர் உண்மையிலேயே மனம் மாறி, என்னை ஏற்றுக் கொண்டு விட்டார், இனி நமக்கு வாழ்க்கையில் துன்பம் என்பது இல்லை என்று மனம் பூரித்திருந்தேன். என்னுடைய நம்பிக்கையில் இவ்வளவு சீக்கிரமாக மண் விழும் என்று நான் நினைக்கவேயில்லை.

நான்கு நாட்களுக்கு முன் அவர் ஆபிசுக்குப் போயிருந்தபோது இது தெரிந்தது. அவருடைய பெட்டியை மறந்து பூட்டாமல் சென்றிருந்தார். நான் வேடிக்கையாக 'அதில் என்ன இருக்கிறது. பார்க்கலாம்' என்று திறந்தேன்.

பெட்டியை முழுவதும் கிளறிப் பார்த்த பிறகு, 'ஏன் பார்த்தோம்' என்று மனம் நொந்து கொள்ளும்படியாகிவிட்டது. அந்த வெட்கக்கேட்டை எப்படி அண்ணா எழுதுவேன்?.........எனக்குப் போட்டியாக இன்னொரு பெண்ணின் படம் அவருடைய பெட்டியில் இருந்தது! அவளால்தான் இவருக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை என்பது தெரிந்த பிறகு நான் என்ன செய்வது?...அவரை ஏதாவது கேட்கலாம் என்று பார்த்தாலும் நான்கு நாட்களாக—அதாவது நான் அந்தப் படத்தைப் பார்த்த நாளிலிருந்து—ஒரு மாதிரியாக இருக்கிறார். ஒரு வேளை நான் அவனுடைய படத்தைப் பார்த்தது தெரிந்து விட்டதோ என்னமோ!

என்னால் இனி ஒரு க்ஷணம் கூடப் பொறுக்க முடியாது. நான் இங்கிருப்பதால் அவருக்கும் தடையாக இருக்கிறது. எனக்கும் நிம்மதியில்லை. ஆகையால் நீ இக் கடிதம் கண்டதும் வந்து ஏதாவது காரணம் கூறி என்னை அழைத்துச் சென்று விடு! பகவான் அடுத்த ஜன்மத்திலாவது எனக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கட்டும்.

உன் அருமை மைதிலி."

உமா எழுதியிருந்தான்:

"கோபால்!

வாழ்க்கையில் நான் இதை விடப் பெரிய தவறு செய்திருக்க முடியாது. 'பெண்களை நம்பாதே!' என்று சொல்வது பொய்யல்ல என்று இப்பொழுதல்லவா தெரிகிறது? ஆயினும் மைதிலி இப்படித் துரோகம் செய்வாள் என்று நான் கனவிலும் எண்ணவேயில்லை. இப்பொழுது கூட அதை நம்புவது கடினமாகத்தான் இருக்கிறது.

விஷயம் இதுதான். உன் தங்கையின் பெட்டியில் நான்கு நாட்களுக்கு முன் ஒரு புருஷனின் புகைப்படத்தைப் பார்த்தேன். அதைப் பார்த்ததிலிருந்து நான் மன அமைதியை இழந்துவிட்டேன். அவள் இருதயத்தில் இன்னொரு புருஷனுக்கு இடமிருப்பதை அறிந்த பிறகு எனக்கு இருப்பே கொள்ளவில்லை.

அவளிடம் விசாரிக்கலாமென்று பார்த்தேன். நான்கு நாட்களாக ஒரு

மாதிரியாக இருக்கிறான். ஒரு வேளை அவன் குட்டு வெளியாகி விட்டதைத் தெரிந்து கொண்டானோ, என்னமோ!

இக் கடிதம் கண்டவுடன் நீ வந்து உன் தங்கையை அழைத்துப் போய் விடு! நான் நிம்மதியாகத் தேசாந்திரம் போய் விடுகிறேன். எனக்கு வேறு வழி தோன்றவில்லை.

உமா.''

கடிதங்களை நான்கைந்து முறை படித்த பிறகு எனக்குச் சிறிது நம்பிக்கை உண்டாயிற்று. இருவர் மனதிலும் சந்தேகப்பேய் நுழைந்து விடவே, தீர விசாரிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. ஆகையினால் நேரே போனால் சமாதானம் செய்து வைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தீபாவளிக்கு வேண்டிய ஜவுளிகளுடனும், மற்ற பொருள்களுடனும் ஊருக்குப் புறப்பட்டேன்.



நான் போன சமயம் உமா ஆபீசுக்குப் போயிருந்தான். என்னைக் கண்டதும் மைதிலி, "அண்ணா!" என்று நீர் மல்கும் கண்களுடன் என் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"மைதிலி! ஏது, நீ கூடவா இப்படி அவசரப்படுவது? நீ புத்திசாலி என்று எண்ணியிருந்தேனே!......அழாதே!" என்று உள்ளே அழைத்துச் சென்றேன்.

சிரமபரிகாரம் செய்து கொண்ட பிறகு, "அந்தப் படத்தைக் கொண்டு வா!" என்றேன்.

"அது என்னிடம் இல்லையே! அன்று பார்த்ததுதான்!" என்றாள்.

"அட பைத்தியமே! அதுதான் அவசரப்பட்டு விட்டாய். நன்றாக ஆழ்ந்து பார்த்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும். எதற்கும் அவன் சாயந்திரம் வந்தால் தெரிந்து போகிறது!" என்று சமாதானப் படுத்தினேன்.

பிறகு அவனுக்குத் தெரியாமல் அவன் பெட்டியிலிருந்த 'புருஷனின் படத்'தை எடுத்துப் பார்த்தேன். என் மனதிலிருந்த பாதி பாரம் இறங்கிவிட்டது.

சாயந்திரம் உமாவை அழைத்துக் கொண்டு வெளியே சென்றேன். 'பார்க்'கில் உட்கார்ந்திருந்தபோது, நான் எடுத்துப் போயிருந்த 'புருஷனின் பட'த்தை அவன் கையில் கொடுத்து, "நன்றாகப் பார்த்து விட்டு, உன் முடிவு சரிதானா என்று சொல்" என்றேன்.

அவன் சற்று நேரம் அதை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். "எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்றான் கடைசியில்.

"உமா! அந்தப் படத்திலிருப்பது மைதிலி என்று தெரியவில்லையா? அம்மான் கோலத்தின்போது நீ மைதிலியைப் பார்க்க வில்லையா?" என்று கேட்டேன்.


"அப்பொழுதுதான் நான் கோபத்தில் தலையைத் தூக்கவே யில்லையே! எப்படிப் பார்த்திருக்க முடியும்?" என்று சொல்லி உமா தலை குனிந்தான்.

இரவு மைதிலியிடம் 'அந்தப் பெண்ணின் பட'த்தைக் கொடுத்துக் கவனித்துப் பார்க்கச் சொன்னேன்.

அவளுக்குப் புரியவில்லை. துக்கம் தான் வந்தது. வெகு நேரம் அவளை அழ விடாமல், "நம்ப அடுத்தாத்துச் சந்துருவைக் கூடவா உனக்குத் தெரியவில்லை! அவன் நாடகங்களில் பெண் வேஷம் போடும் விஷயம்தான் உனக்குத் தெரியுமே? முகத்தில் வேறு எழுதி ஒட்டியிருக்கிறதே!" என்றேன்.

கண்களைத் துடைத்துக் கொண்டே மைதிலி 'களுக்'கென்று சிரித்தாள். உமாவும் அவளுடன் சேர்ந்து சிரித்தான். சந்தேகம் தீர்ந்தது. அப்புறம் தீபாவளி கொண்டாட்டமாக நடந்தது என்று சொல்லவா வேண்டும்?

ஓர் அழகிய நங்கை



சாந்தி! டில்லியில் அரசியல் பிரமுகர், முன்னுக்கு வர ஆவல் மிகுந்த ஓர் இளைஞரின் மனைவியாகிய இவ்வழகுவழகி, தனது வதன எழிலைப் பாதுகாக்க, ஆயிரக்கணக்கான நம் பெண்மணிகளைப் போல புதிய முறையாகிய பாண்ட்ஸைக் கையாண்டு வருகிறாள்.

ப்ராணசக்தி பிரதிபலிக்கும் கோமளவதனி, சாந்தி!

.... எளிமையில், பூ போன்ற சருமம் பரிபூர்ண எழிலுக்கென்றியமையாததென சாந்தி கண்டு பிடித்துள்ளாள். பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமிலுள்ள இயற்கைத் தைலங்களால் அவள் முகத்தை சுத்தம் செய்து, மிருதுவும் மழமழப்புமாக இருக்கச் செய்கிறாள். தினம் காலை, மாலைகளில், பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்திற் பூசி, சொற்ப நேரங்கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசு, அழுக்குகளெல்லாம் அத்துடனேயே வந்து விடுகிறது. பின்பு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவுகிறாள். அது சருமத்தினுட்சென்று, உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்குத் திருப்பி அளிக்கிறது. வதனம் பூவிதழ்போன்று மோகனகாந்தி வாய்க்கவும் செய்கிறது.

"என்ன பாங்கும் பதவிசுமாக குடித்தனம் பண்ணுகிறாள்!"





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் — தினம் காலை, மாலைகளில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தைச் சுத்தம் செய்யுங்கள் — சோப்பு வேண்டாம். ஒன்றிரண்டு வாரத்தில் முகசருமம் சேர்த்தி மிக வாய்க்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் — கோல்ட் க்ரீமைத் துடைத்துக் களைந்ததும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாய்ப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திருப்பி அளிக்கும். வதனத்தை மிருதுவும், பளபளப்புமாக்கும். அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.

பாண்ட்ஸ் பவுடர் — பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள் — உங்கள் முகசாயலுக்குகந்த வர்ணமாகத் தேர்ந்தெடுங்கள். அது முகத்திற்கு ரோஜா விதழ் போன்ற ஓர் மோகன காந்தி அளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற்கெழுதவும்: எல். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

JWT

காலக்ஷேபம்

அவன் கேள்வி !

டாக்டர் (நோயாளியிடம் பில்லிருப்பு ஊனக் கொடுத்து):—இதை மூன்று நாளைக்குச் சாப்பிடு; சுகமாய் விடும்.

நோயாளி (கிராமத்து ஆசாமி):—என்னங்க, இந்தக் துண்டுக் காகிதத்தை மூன்று நாளைக்கு நான் என்னமா சாப்பிடுகிறதுங்க?

—ஜி. ஜெ. மாணுவேலன்.

மூன்று ரகம் !

நண்பர்:—இது என்ன செட்டியாரே! எதற்காக அளப்பதற்கு மூன்று படிகள் வைத்திருக்கிறீர்கள்?

கடைக்காரர்:—ஒரு படி வாங்கறதுக்குங்க; இன்னொரு படி கொடுக்கிறதுக்குங்க! மூன்றாவது படி நம்ம சொந்த உபயோகத்துக்குச் சாமான்களை அளக்கிறதுக்குங்க!

—என். வி. துரைசுவாமி.

படிக்கத் தெரியாது !

"என்ன ஸார், கவலையாயிருக்கேள்?"

"ஒன்றுமில்லை, ஸார்! என்னுடைய நாய் காணமற் போய்விட்டது!"

"பேப்பரில் விளம்பரம் செய்யுங்களேன்!"

"என்னுடைய நாய்க்குப் படிக்கத் தெரியாதே!"

—எஸ். வேணு.

ஆச்சரியம் !

பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்த சிறுவன் தன் தகப்பனை நோக்கி, "அப்பா, இந்தப் பஸ் படத்துக்குப் பக்கத்தில் ஆச்சரியக் குறி ஏன் போட்டிருக்கிறது?" என்று கேட்டான்.

"இங்கே பஸ் நிற்பது என்பது ரொம்பவும் ஆச்சரியமான விஷயம் என்பதைக் குறிக்கத்தான்!"

கே. வி. ஆர்.

கிடையாது !

குடியிருப்பதற்காக வந்தவர் (வீட்டை ஒரு முறை பார்த்துவிட்டுச் சொந்தக்காரரைப் பார்த்து):—வீட்டில் என்ன ஸார், நாற்றம் அடிக்கிறது? ஒருவேளை சாக்கடை அடைத்துக் கொண்டிருக்கிறதோ?

சொந்தக்காரர்:— இருக்காது! இந்த வீட்டிற்குச் சாக்கடையே கிடையாதே!

—என். என்.

தெரியவில்லை !

பஸ் நிற்குமிடத்தில் இரண்டே பிரயாணிகள் நின்றுகொண்டிருந்தனர். ஒரு காலி பஸ் வந்து நின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கித் தள்ளி வண்டிக்குள் ஏறினர்.

கண்டக்டர்:— என்னய்யா, வண்டிதான் காலியாயிருக்குதே, ஏதுக்கய்யா இப்படி அவசரப்பட்டு ஒன்மேலே விழறீங்க?

பிரயாணிகளில் ஒருவர்:—முண்டி அடிச்சு விழுந்து ஏறியே பழக்கமாயிடுத்தப்பா? நிதானமா ஏறத் தெரியலே!

—எஸ். டி. எல். நாசு.

இன்னும் மோசம் !

வாங்க வந்தவர்:—ஏனப்பா, முருங்கைக்காய் ஒரு கட்டு என்ன விலை?

விற்பவன்:—நாலணுங்க!

வாங்க வந்தவர்:—எல்லாம் ஓரேயடியாய் முத்திப்போய் விறகு மாதிரி இருக்கிறது. நாலணு என்கிறாயே!

விற்பவன்:—விறகு மாதிரி இருக்கிறதினாலே தானுங்க நாலணு! —எம். எஸ். துரைசாமி.

நல்ல யோசனை

ஆபீசில் தூங்கிவழிந்த குமாஸ்தா குப்புசாமியைக் கண்ட மானேஜர், "என்ன ஓய்! இப்படித் தூங்குகிறீரே?" என்று கேட்டார்.

குப்புசாமி:— மன்னிக்கணும்! குழந்தை நேற்று என் இராத் தூக்கத்தைக் கெடுத்து விட்டது; அதனால்தான் இங்கே சற்றுத் தூங்க நேர்ந்தது.

மானேஜர்:—அப்படியானால் நாளை முதல் அந்தக் குழந்தையையும் ஆபீசுக்கு அழைத்து வந்துவிடுங்கள்! —கே. ஆர். சுவாமி.

கோபதாபம்

மாலு

பொழுது விடிந்தால் தீபாவளி. ஏதோ கோபத்தில் சொன்னதற்காக அம்மாவுக்குப் பரிந்து கொண்டு மீனாவை ஊருக்கு அனுப்பிவிட்டான் காசிநாதன். நாளடைவில் காசிநாதனின் மனக் கஷ்டத்தை அறிந்து அவனது தாயார் மீனாவை அழைத்து வர ஊருக்குச் சென்றிருந்தாள். ஒவ்வொரு கணமும் தன் தாயையும் மனைவி மீனாவையும் ஆவலுடன் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தான் காசிநாதன்.

★

என்னதான் தன் தாயின்மீது அன்பிருந்தாலுங்கூட மீனாவை அவள் ஏதாவது சொல்லிவிட்டால் காசிநாதனுக்குப் பிரமாதமான கோபம் வந்து விடும். துக்கம், கவலை இன்னதென்றே தெரியாமல் இயற்கையாகக் காட்டில் வளர்ந்து படர்ந்து கிடக்கும் கொடி போல வளர்ந்திருந்தாள் மீனா. வெள்ளரிப் பிஞ்சுபோல் தளதள வென்று வளர்ந்திருந்த அவளது மேனியிலே ஏதோ ஒரு சக்தி இருந்தது. அவள் நடையிலே ஒரு துள்ளல்; பார்வையிலே ஒரு கவர்ச்சி!

"மெள்ள நடந்து போடி! பூமி அதிரும்படி நடக்காதே!" என்பாள் காசிநாதனின் தாயார்.

மீனா குபீரென்று சிரித்துவிடுவாள்.

"என்னடி இது, பொம்மனாட்டி இப்படி எங்கேயாவது சிரிக்கிறது உண்டோ?" என்று வெடுக்கென்று கேட்டு விடுவாள் அவள்.

இப்படியே மீனாவின் ஒவ்வொரு அங்க அசைவிலும் ஏதாவது குற்றங் கண்டு பிடிப்பது காசிநாதனின் தாயாருடைய வேலை: எடுத்ததற்கெல்லாம் அவளைக் கேலி செய்வது மீனாவின் வேலை!

இவ்வாறு மன ஒற்றுமையில்லாமலே இருவரும் நெடு நாள் இருந்து வந்தார்கள். காசிநாதனின் அனுதாபமெல்லாம் மீனாவின் பக்கம்தான் இருந்து வந்தது. ஆனாலும் வெளிக்குத் தன் தாயின் பக்கமாகவே பேசுவதுபோல் பாசாங்கு செய்து வந்தான் காசிநாதன்.

அன்று வெள்ளிக்கிழமை. ஏதோ எண்ணி மீனா மனச்சோர்வுடன் உட்கார்ந்திருந்தாள்.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமாக ஒரு சுமங்கலி இப்படி முகத்தைத் தூக்கிக் கொண்டிருந்தால் குடித்தனம் என்னத்திற்காகும்?" என்று கேட்டாள் காசிநாதன் தாயார்.

"உங்கள் குடித்தனம் எக்கேடு கெட்டால் எனக்கு என்ன!" என்று எரிந்து விழுந்தாள் மீனா.

"எல்லாம் அவன் கொடுக்கிற இடம்! நேற்று வந்தவளெல்லாம் என் குடித்தனத்தைப் பற்றி இப்படிச் சொல்லும்படியாகி விட்டது!" என்று வருத்தப்பட்டாள் காசிநாதனின் தாயார்.

இந்தச் சமயத்தில், "அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே அங்கு வந்தான் காசிநாதன். தன் தாயாரின் சோகம் ததும்பும் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"மீனா! அம்மாவை என்ன சொன்னாய்? ஏன் இப்படி இருவரும் இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"உங்கள் அம்மாவை யாரும் ஒன்றும் சொல்லவில்லை. பொழுது விடிந்து பொழுது போனால் உங்கள் அம்மாவின் தொல்லைதான் எனக்குப் பெரிய தொல்லையாகி விட்டது!" என்று மீனா அங்கலாய்த்தாள்.

அம்மாவின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான் காசிநாதன்.

"நீயும் உன் மனைவியும் சௌகரியமாயிருங்கள்; நான் எங்கேயாவது போகிறேன்!" என்று சொல்லி அழ ஆரம்பித்து விட்டாள் அவள்.

காசிநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இந்தப் பக்கம் பார்த்தால் பத்து மாதம் தன்னைச் சுமந்து பெற்ற தாயார்; அந்தப் பக்கம் பார்த்தால் அருமை மனைவி! யாரை நொந்து கொள்வது?

"மீனா! இப்படியெல்லாம் சதா சண்டை போட்டுக் கொண்டிருப்பதாயிருந்தால் நீ பேசாமல் பிறந்தகம் போய் விட வேண்டியதுதான்!" என்றான்.

அதற்கென்ன நானேக்கே கொண்டு போய் விட்டுவிடுங்களேன்! இங்கே இருக்க யாருக்கு ஆசையிருக்கிறது!" என்றாள் மீனா ஆத்திரத்தில்.

★

ஊருக்குத் திரும்பும்போது மீனா தன்னைப் பார்த்த பார்வையானது காசிநாதனின் உள்ளத்தை என்னவெல்லாமோ செய்தது. தான் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டுத் திரும்புவதாகவே அவன் நினைத்தான். எங்கு நோக்கினும் மீனாவின் அன்பு நிறைந்த முகம் தோன்றி அவன் மனதை அரித்தது.

காசிநாதனின் தாயாருக்கும் இப்பொழுதெல்லாம் வீட்டில் இருப்பே கொள்வதில்லை. அவளுக்கு வீடே வெறிச்சென்றிருப்பது போலிருந்தது. வெளியில் யாராவது புருஷனும் மனைவியுமாகப் போவதைப்பார்த்துவிட்டால் அவளுடைய மனம் படாதபாடு பட்டுவிடும். உள்ளே ஓடோடியும் வந்து தன் மகனைப் பரிதாபத்துடன் பார்ப்பாள். வாசலில் பூக்காரன் வந்து, "அம்மா, பூ வாங்கவில்லையா?" என்று கேட்பான். "வேண்டாம், அப்பா!" என்று சொல்லும்போது அவளுடைய கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் கசிந்து விடும்.

தீபாவளி நெருங்க நெருங்க அவளுடைய வருத்தம் அளவு கடந்து போயிற்று. நல்ல நாளும் அதுவுமாய்க் குழந்தைகள் இரண்டும் பிரிந்திருக்க வேண்டாமென்று நினைத்தாள். ஆகவே, அவள் அன்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "நானேக்கு ஊருக்குப் போய் மீனாவை அழைத்துக் கொண்டு வரலாம் என்றிருக்கிறேன். தீபாவளியும் அதுவுமாய் அவள் இல்லாமலிருப்பதால் வீடு வெறிச் சென்றிருக்கிறது!" என்றாள்.

"உங்கள் இஷ்டம்; நீங்கள் எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள்!" என்று சமர்த்தாகப் பதிலளித்தான் காசிநாதன்.

தாயற்ற மீனாவிடம் ஒரு வாரம் வரை அவள் தந்தையும் அண்ணாவும் அன்பாக இருந்தார்கள். போகப் போக அவர்கள் அவளை லட்சியம் செய்வதில்லை. தன் தாயார் இருந்திருந்தால், தான் இப்படி நாதியற்றவள் போல் இந்த வீட்டில் இருக்க வேண்டியிராதே என்று நினைத்துப் பார்த்த மீனாவின் உள்ளம், அடுத்த கணமே காசிநாதனின் தாயாரைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டது.

அவர் தன் தாயாரிடம் வைத்திருக்கும் அன்பு தவறில்லை என்றும், தான்தான் தவறு செய்து விட்டோம் என்றும் நினைத்து அவள் ஏங்க ஆரம்பித்து விட்டாள்.

திடீரென்று அன்று காலையில் காசிநாதனின் தாயார் தன்னை அழைத்துக் கொண்டு போக வந்ததும் மீனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "மாமி! என்னை மன்னித்து விடுங்கள்" என்று கண்ணீரும் கம்பலையுமாய் அவள் நமஸ்கரித்தாள். காசிநாதனின் தாயாரும் நடந்தவற்றையெல்லாம் மறந்து, அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

★

வண்டிச் சத்தத்தைக் கேட்டதும் வாசலுக்கு ஓடி வந்தான் காசிநாதன். வண்டியை விட்டு இறங்கிய மீனா தன் கணவனை விழுங்கி விடுபவள் போல் பார்த்தாள். காதலர்கள் இருவரும் கண்களின் மூலம் தங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.


தீபாவளியன்று காலை கங்காஸ்நானம் செய்துவிட்டுப் புத்தம் புது ஆடைகளை அணிந்து கொண்டு வந்து தன்னை நமஸ்கரித்த மகனையும் மருமகளையும் மனமார வாயார வாழ்த்தினாள் காசிநாதனின் தாயார். அவர்கள் மூவருடைய உள்ளமும் ஒன்று பட்டதற்கு அறிகுறியாகத் தெருவில் பட்டாசுக்கட்டு பட பட வென்று வெடித்தது!



அருமையான பற்கள்!



உங்கள் புன்னகையின் வசீகரத்தன்மை அபாயத்துக்குள்ளாகிறதா?



எல்லோரிடமிருந்தும் புகழைப்பெற உங்கள் குதூகல புன்னகை ஒருவித காந்த சக்தி. அதை ஈறு வியாதிகளால் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். தினந்தோறும் எஸ். ஆர். டூத்பேஸ்ட்*னால் பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் பளிச்சென்று வெண்மையாக, உங்கள் புன்முறுவலின் நிகரற்ற செல்வமாய் விளங்கும்.


*பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 27-50 TM — D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



LKI அக்டோபர் 20,1946 4 அண

தீபாவளி ஜவுளிகளுக்கும்
தெய்வ ஆராதனைக்கும்
கபாலியின் சந்நிதானம்!

★

தீபாவளி பண்டிகையை முன்விட்டு

கண்ணைக் கவரும் கலர்களில் புத்தம்புது பார்டர்களடங்கிய பட்டுப் புடவைகள் ஏராளமாக வந்து குவிந்துள்ளன. இன்றே ஒரு முறை விஜயம் செய்து உங்கள் தேவையைப் பொறுக்கி யெடுத்துக் கொள்ளுங்கள்!

PHONE : 8016

★

ராதா ஸில்க் எம்போரியம்

1-14, சன்னதித் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ் :
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,70,800

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 48,90,215

ரிஸர்வ் நிதி ரூ. 55,00,000

டெபாஸிட்டுகள் :
30-6-46 முடிய
ரூ. 17 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

குழந்தைகளின் சால் குலைக் கட்டி வியாதிகளுக்கு
ஜம்மியின் "லிவர்க்யூர்"

அறிவிப்பு

எங்கள் வைத்திய நிபுணர், கீழ்க்கண்ட இடங்களுக்கு, அடியில் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். குழந்தைகளின் சால் குலைக் கட்டி வியாதிகளை நேரில் காண்பித்து யோசனைகள் கேட்டுக் கொள்ளலாம்.

நேரம்: காலை 8 முதல் 11 மணி வரை   மாலை 3 முதல் 5-30 மணி வரை

இடம்	தேதி	தங்கும் இடம்
புதுக்கோட்டை :	27—10—46	ஹோட்டல் மானஸரோவர்.
காரைக்குடி :	28—10—46	மெஸர்ஸ். ஏ. வி. & சன்ஸ், டிராவலர்ஸ் ரூம்ஸ்.
தேவகோட்டை :	29—10—46	மெஸர்ஸ். மீனாக்ஷி ஸ்டோர்ஸ்.
ராமனுதபுரம் :	31—10—46	மெஸர்ஸ். ராஜன் மெடிகல் ஹால்.
மதுரை :	1 & 2—11—46	மெஸர்ஸ். டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ், வடக்குச் சித்திரை வீதி.
திருவனந்தபுரம் :	4 & 5—11—46	மெஸர்ஸ். மாடர்ன் மெடிகல் ஸ்டோர்ஸ், புதன்சந்தை அல்லது மெஸர்ஸ். எம். வி. கணபதி அய்யர் & சன்ஸ், ஆற்றுக்குளக்கரை.
தென்காசி :	6—11—46	மெஸர்ஸ். மெடிகல் ஸ்டோர்ஸ்.
திருநெல்வேலி :	8 & 9—11—46	சந்திர விலாஸ் ஹோட்டல்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்

தலைமை ஆபீஸ் : மதராஸ்   :   பிராஞ்சு : திருச்சிறுப்பள்ளி



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் விடி ஏஜண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு :

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

REGD. NO. M. 4392



பெரீஸ் பிஸ்கட்ஸ்

குதூகலத்துடன்
குழந்தைகள்
விரும்புவது



PERRY & CO., USILAMPATTI

தஞ்சை ஜில்லாவுக்கு ஏஜன்ட்ஸ்: கே. ராகவேந்திர ராவ்
சந்திர விலாஸ், கும்பகோணம்